## இரண்டாம் பகுதி

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் வங்கித் தொழில் தொழிற்பாடுகளும் | i |
| நாணய வெளியீடு | vii |
| வங்கித் தொழில் அபிவிருத்தியும் பயிற்சியும் | viii |
| வங்கி மேற்பார்வை | ix |
| அபிவிருத்தி நிதி | x |
| கிராமியக் கொடுகடன் | xvi |
| அளவீடுகள் | xix |
| கிராமிய வங்கித் தொழிலும் அலுவலர் பயிற்சிக் கல்லூரியும் | xix |
| வாடிக்கையாளர் பணிகள் | xx |
| வெளியீடுகள் | xx |
| பிரதேச அலுவலகம் — மாத்தறை | xxi |
| பிரதேச அலுவலகம் — அநுராதபுரம் | xxiv |
| செலாவணிக் கட்டுப்பாடு | xxvi |
| பொதுப்படுகடன் | xxviii |
| ஊழியர் சேமநிதியம் | xxix |
| ஆளணி | xxxii |


DISCARDED

# மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

## கணக்குகளும் வங்கித்தொழில் தொழிற்பாடுகளும்

1982 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மத்திய வங்கியின் ஐந்தொகையும் 1982 திசெம்பர் 31 உடன் முடிவடைந்த இலாபநட்டக்கணக்கும் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளன.

1982 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மத்திய வங்கியின் மொத்தச்சொத்துக்களை 1981 திசெம்பர் 31இல் உள்ளவாறான ரூ. 27,351,805,694 உடன் ஒப்பிடுகையில் ரூ. 30,166,745,636 ஆக விளங்கியது. ரூ. 2,814,939,942 கொண்ட அதிகரிப்பிற்கு ''பன்னாட்டு ஒதுக்கிலும்'' வர்த்தக வங்கிகளுக்கான குறுங்காலக் கடன்கள் தவிர்ந்த ''உள்நாட்டுச் சொத்துக்களின்'' அனைத்து வகைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும். ''பன்னாட்டு ஒதுக்கு'' 1981 திசெம்பர் 31 இல் ரூ. 6,666,756,907 இலிருந்து 1982 திசெம்பர் 31 இல் ரூ. 7,095,949,247 இற்கு ரூ. 429,192,340 கொண்ட அதிகரிப்பைக் கொண்டிருந்தவேளையில் ''உள்நாட்டுச் சொத்துக்கள்'' 1981 திசெம்பர் 31 இல் ரூ. 15,622,733,001 இலிருந்து 1982 திசெம்பர் 31 இல் ரூ. 19,506,643,744 இற்கு ரூ. 3,883,910,743 இனால் அதிகரித்தது. ''ஏனைய சொத்துக்களினதும் கணக்குகளினதும்'' மொத்தம் ரூ. 1,498,163,141 இனால் 1981 திசெம்பர் 31 இன் ரூ. 5,062,315,786 இலிருந்து 1982 திசெம்பர் 31 இல் ரூ. 3,564,152,645 இற்கு வீழ்ச்சியடைந்தது.

மீளாய்விற்குரிய காலப்பகுதியில் வங்கியின் பொறுப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பிற்கு ''வெளிநாட்டுக் கடன்கள்'' ரூ. 266,874,600 இலிருந்து ரூ. 1,851,177,070 இற்கு ரூ. 1,584,302,470 இனால் அதிகரித்தமையே பெருமளவு காரணமாகும். ''சுற்றோட்டத்திலுள்ள நாணயம்'' ரூ. 1,212,985,106 இனால் ரூ. 5,643,497,160 இலிருந்து ரூ. 6,856,482,266 இற்கு அதிகரித்தது.

வங்கியின் 1982 ஆம் ஆண்டிற்கான வருமானம் ரூ. 2,723,839,303 ஆக விளங்கி முன்னைய ஆண்டின் வருமானமான ரூ. 2,193,579,293 உடன் ஒப்பிடுகையில் ரூ. 530,260,010 கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. ஒதுக்குக் கணக்குகளுக்கான செலவு ஒதுக்கங்களும் பெறுமானத்தேய்விற்கான ஒதுக்கங்களும் ரூ. 1,221,389,163 ஆக விளங்கியமையினால் தேறிய இலாபம் ரூ. 1,502,450,140 ஆகக் காணப்பட்டது. நாணயச் சீராக்கக் கணக்கின் பற்றில் நிலுவையாக இருக்கும் ரூ. 1,450,140 கொண்டதொரு நாணயச்சட்ட விதியின் பிரிவு 39 (அ) இன் நியதிகளின்படி வங்கியின் வருமானத்திற்கெதிராகத் தீர்க்கப்பட்டது. ரூ. 1,000,000 கொண்ட தொகை நாணயச்சட்ட விதியின் பிரிவு 39 (ஆ) வின் நியதிகளுக்கிணங்க வங்கியின் மிகைக்குக் கொண்டுவரப்பட்டது. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (இ) இன் நியதிகளின்படி அரசிற்குச் செலுத்தப்பட்ட ரூ. 1,500,000,000 கொண்ட நிலுவை, மத்திய வங்கிக்கான அரசின் வெளிநிற்கும் கடப்பாடுகளின் ஒரு பகுதித் தீர்ப்பனவாகக் கருதப்படும்.

## 1982 ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாளில்

### ஐந்தொகை — 1982ஆம் ஆண்டு

| 1981 திசெம்பர் 31 ரூபா | 1981 திசெம்பர் 31 ரூபா | பொறுப்புக்கள் | 1982 திசெம்பர் 31 ரூபா | 1982 திசெம்பர் 31 ரூபா |
|---|---|---|---|---|
| | | **மூலதனக் கணக்குகள்** | | |
| 15,000,000 | | முதல் ... | 15,000,000 | |
| 66,000,000 | 81,000,000 | மிகை ... | 67,000,000 | 82,000,000 |
| | | **சுற்றேட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 5,412,425,674 | | தாள்கள் ... | 6,594,611,997 | |
| 231,071,486 | 5,643,497,160 | குத்திகள் ... | 261,870,269 | 6,856,482,266 |
| | | **வைப்புக்கள்** | | |
| 1,440,737,041 | | அரசு ... | 1,025,896,298 | |
| 15,540,643 | | அரச முகவர் நிலையங்களும் அரச நிறுவனங்களும்... | 18,804,278 | |
| 1,846,342,353 | | வர்த்தக வங்கிகள் ... | 2,243,575,525 | |
| 5,350,691,097 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கி நிறுவனங்கள் ... | 5,113,496,976 | |
| 306,073 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூ. 113,053,560/- கொண்ட தொகையை நீக்கிய கட்டாயச் சேமிப்பு நிதி ... | 406,865 | |
| 316,971,483 | 8,970,588,690 | ஏனையவை ... | 561,158,942 | 8,963,338,884 |
| | 266,874,600 | வெளிநாடுகளிலிருந்து பெற்ற கடன்பாடுகள் ... | | 1,851,177,070 |
| | 525,000,000 | நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் ... | | 775,000,000 |
| | 110,000.000 | மூலதன உதவுதொகைக் கணக்கு ... | | 110,000,000 |
| | 11,754,845,244 | ஏனைய பொறுப்புக்களும், கணக்குகளும் ... | | 11,528,747,416 |
| | 27,351,805,694 | | | 30.166,745,636 |

## 1982 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற

| ரூபா | ரூபா | | | ரூபா |
|---|---|---|---|---|
| | 2,169,783,959 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்களையும், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும், காணியும் கட்டடங்களினதும், அலுவலகத்தளபாடங்களினதும் மீதான பெறுமானத்தேய்வையும், உள்ளடக்கும்) நாணய விதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளுக்கும். | | 1,221,389,163 |
| | | 1982 திசெம்பர் 31 உடன் முடிவுற்ற ஆண்டுக்கான தேறிய இலாபம் | | |
| 22,795,334 | | நாணய சீராக்கக் கணக்கிற்கு-நாணய விதிச் சட்டத்தின் 39(அ) பிரிவின் நியதிகளின் கீழ் தீர்த்துக்கட்டிய நிலுவை. | 1,450,140 | |
| 1,000,000 | 23,795,334 | நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 39 (ஆ) இன்படி தேறிய இலாபம் மிகைக்குக் கொண்டு செல்லப்பட்டது. | 1,000,000 | |
| | | நாணய விதிச் சட்டத்தின் 39 (இ) நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வரவேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியை தீர்ப்பதற்கு | 1,500,000,000 | 1,502,450,140 |
| | 2,193,579,293 | | | 2,723,839,303 |

## உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள்

### திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளபடி

| 1981 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1982 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 5,591,108,534 | | இலங்கைக்கு வெளியே உள்ள பணங்களும், நிலுவைகளும் | 6,219,483,080 | |
| 638,648,498 | | *வெளிநாட்டுப் பிணைகள் ... | 728,436,348 | |
| 436,999,875 | 6,666,756,907 | கையிருப்பிலிருக்கும் சிறப்பு எடுப்பனவு உரிமை ... | 148,029,819 | 7,095,949,247 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| | | கடன்களும் முற்பணங்களும் | | |
| 1,536,437,811 | | அரசிற்கு ... | 2,140,337,811 | |
| 411,362,446 | | ஏனையவற்றிற்கு-நடுத்தர நீண்டகால ... | 603,213,207 | |
| 996,921,098 | | குறுங்கால ... | 792,953,480 | |
| 12,568,011,646 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் ... | 15,860,139,246 | |
| 110,000,000 | 15,622,733,001 | நிதியும், ஏனைய நிறுவனங்களுக்குமான உதவுதொகைகள் | 110,000,000 | 19,506,643,744 |
| | 5,062,315,786 | ஏனைய சொத்துக்களும், கணக்குகளும் ... | | 3,564,152,645 |
| | | *அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1 இல் ரூபா 5,527,675/- முகப்பப் பெறுமானத்திலும், 1965 மே 24இல் ரூ. 57,450/- முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப்பட்ட சந்தைப் பெறுமானங்கள், மேற்குறித்த நாட்களில் முறையே, ரூ. 2,933,697/- ஆகவும், ரூபா 34,340/- ஆகவும் இருந்தன.) | | |
| | 27,351,805,694 | | | 30,166,745,636 |

### ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| ரூபா | | ரூபா |
|---|---|---|
| 2,193,579,293 | வட்டி, ஏனையவை | 2,723,839,303 |
| 2,193,579,293 | | 2,723,839,303 |

**வர்ணசேன இராசபுத்திரம்**
ஆளுநர்

**ஏ. ரி. டபிள்யூ. ஜெகோரட்னம்**
முதன்மைக் கணக்காளர்

1982ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற மத்திய வங்கியின் கணக்குகள் இலங்கை அரசியல் அமைப்பின் பிரிவு 154 (1) இற்கு அமையவும், 1971இன் எண் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) இற்கு ஏற்பவும் நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42(1) இற்கு ஏற்பவும் எனது பணிப்புரிமையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) பிரிவு 42 (2) இன் நியதிகளுக்கேற்ப நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணக்காய்வு அலுவலகம்,
கொழும்பு-7.
1983, எப்பிறல் 11

**டபிள்யூ. ஜீ. ஏபா**
பதில் கணக்காய்வாளர் நாயகம்.

**வெளிநாட்டுச் செலாவணி**

வெளிநாட்டுச் செலாவணி வீதங்களை நிர்ணயித்தல், வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகம் ஆகியன தொடர்பான தொழிற்பாட்டு நடைமுறைகளை 1982 நவெம்பர் 10 ஆம் நாளிலிருந்தும் மத்திய வங்கி மாற்றிக் கொண்டது. மிக முக்கியமான பண்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) ஒவ்வொரு வேலைநாளிலும் பி. ப. 2.00 மணிக்கு வர்த்தக வங்கிகளின் பிரதிநிதிகளின் கூட்டத்தில் செலாவணி வீதங்களை நிர்ணயிப்பதை நிறுத்துதல்.

(ii) உடன் தந்தி மாற்றல்களின்மீது வர்த்தக வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கான அலுவல்சார் வாங்கல் விற்றல் வீதங்களை அறிவிப்பதை நிறுத்துதல், உண்டியல்கள், வரைவுகள், பயணிகள் காசோலை போன்ற பல்வேறு வகை வெளிநாட்டு நாணயச் சாதனங்களுக்கு வங்கிகள் தமது சொந்த வாங்கல் விற்றல் வீதங்களை நிர்ணயிக்கவும் தற்பொழுது அனுமதிக்கப்பட்டுள்ளன.

1982 நவெம்பர் 10 ஆம் நாளிலிருந்தும் நடைமுறைக்கு வந்த முறையின் கீழ் இலங்கை ரூபாவிற்கெதிராக ஐக்கிய அமெரிக்க டொலர்களின் உடன்வாங்கல், விற்றல் வீதங்களை வங்கி ஒவ்வொரு வேலைநாளிலும் காலையில் அறிவிக்கும். அத்துடன் வங்கி ஒவ்வொரு சாதாரண வேலை நாளிலும் பி. ப. 2.30 மணிவரை ஐக்கிய அமெரிக்க டொலரின் உடன்வாங்கல், விற்றலுக்கும் தயாராக இருக்கும். மத்திய வங்கி ரூபாக்களுக்கெதிராக ஐ. அ. டொலர்களைக் கொள்வனவு செய்வதன் பொருட்டு உள்ளூர் வர்த்தக வங்கிகளுடனான அதன் முன் கொடுக்கல் வாங்கல்களை ஆகக்கூடியது ஆறுமாதகாலப்பகுதிக்கு தொடர்ந்தும் கட்டுப்படுத்தியது. 1982 இறுதியில் மத்திய வங்கியின் ஐ. அ. டொலரின் ஒருமாத முன் கொள்வனவுகள் உடன்மாற்று நடுவீதத்திலும் ஆறுமாத முன் கொள்வனவுகள் உடன்மாற்று நடுவீதத்திற்கு எதிராக ஐ. அ. டொலர்கள் 100 இற்கு 50 சதங்கள் என்ற கழிவு வீதத்திலும் இருந்தன. இவ்வாண்டில் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய உடன்படிக்கையின்கீழ் நாணயங்களில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மாற்றமின்றியிருந்தன. விற்பனைகள் கொள்வனவு இரண்டும் ஆறுமாதங்கள் வரையிலான உடன் முன் மாற்றல்களும் தொடர்ந்திருந்தன. தொடர்புபட்ட நாணயங்களாக வங்காளதேச தக்கா, பர்மிய கியத், இந்திய ரூபாய், ஈரானிய ரியால்கள், நேபாள ரூபாய், பாக்கித்தான் ரூபாய் ஆகியன இருந்தன.

வங்கி தொடர்ந்தும் வர்த்தக வங்கிகளுடன் வெளிநாட்டு நாணயத்தாள்களில் தொடர்பு கொள்ளும்.

**ஆசியத்தீர்ப்பனவு ஒன்றியம்**

மீளாய்வின் கீழான காலப்பகுதியில் ஆசியத்தீர்ப்பனவு ஒன்றிய வசதியினூடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் மொத்தப் பெறுமதி

UNIVERSITY OF MORATUWA, SRI LANKA LIBRARY

முன்னைய ஆண்டின் எண்தொகையான ரூ. 43,562இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 41,762 இலட்சங்களாக விளங்கியது. மீளாய்விற்குரிய காலப்பகுதிக்கான தேறிய வரவுகள் 1981 இன் ரூ. 7,402இலட்சங்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 1,425 இலட்சங்களாக விளங்கின.

இந்தியாவுக்கு குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவு தொகையும் வெகுமதிக் கொடுப்பனவும்

1964 இன் இந்திய இலங்கை உடன்படிக்கையின் கீழ் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புதலை விரைவுபடுத்துவதற்காக அரசின் சார்பில் வங்கி இரண்டு திட்டங்களைத்தொடர்ந்தும் செயற்படுத்துகின்றது. அவையாவன-

(1) இந்தியாவுக்குத்திரும்பிச்செல்வோருக்கு ஒப்புதலளிக்கப்பட்டதொகையின் 65சதவீதத்திற்குச் சமமான ஒரு தொகை அல்லது அத்தகைய திரும்பிச்செல்வோருக்கு செலுத்தப்பட்ட அத்தொகையின் ஒருபகுதி என்ற நியதியிலமைந்த உதவுதொகைத்திட்டம்.

(2) வெகுமதிக்கொடுப்பனவான ரூ. 500 உம் இத்தொகையில் இத் தொழிலாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு ஊக்குவிப்பாக கொடுக்கப்பட்ட 65 சதவீதமுமாகும். வங்கி இவ்விரு திட்டங்களையும் வர்த்தக வங்கிகளுக்கூடாகத் தொழிற்படுத்தியது.

கடன்களும் முற்பணங்களும்

அரச, அரச உத்தரவாதப் பிணைகளையும், வர்த்தக உற்பத்திக் கடன்களுடன் தொடர்பான சலுகைக் காலச் சான்றிதழ்களையும் வைத்து வர்த்தக வங்கிகளால் பெறப்பட்ட குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டிவீதம் தொடர்ந்தும் ஆண்டிற்கு 14 சதவீதமாக இருந்ததுடன் இலங்கையிலிருந்தான ஏற்றுமதிகளை நிதியீட்டுவதற்கு வங்கிகளுக்கு உதவும் நோக்கமாக வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மத்திய வங்கியின் குறுந்தவணை மீள்நிதியிடல் கடன்களின் மீதான வட்டிவீதம் ஆண்டிற்கு 12 சதவீதமாகவே இருந்தது.

வங்கிவீதத்தில் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மத்திய வங்கியின் கடன் உதவி தொடர்ந்தும் ஒரு பொதுவான வரையறைக்கு உட்பட்டிருந்தது. இந்த எல்லை ஒவ்வொரு வர்த்தக வங்கியினதும் அவற்றின் தெரிந்தெடுக்கப்பட்ட சொத்து விடயங்களினடிப்படையில் சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் ஒவ்வொரு வங்கியினதும் தெரிந்தெடுக்கப்பட்ட சொத்து விடயங்கள் ரூ. 10 இலட்சத்திற்கும் குறைவாக இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு வர்த்தக வங்கிகளுக்குமான ஒதுக்கு ரூ. 10இலட்சத்திற்கும் குறைவாக இருந்தது. இன்றியமையாதவையல்லாத நோக்கங்களுக்கான முற்பணங்கள் 1976 ஆம் ஆண்டு யூன் மாதம் 30ஆம் நாளில் உள்ளவாறான அத்தகைய முற்பணங்களின் மட்டத்தை விஞ்சாதவிடத்து ஒவ்வொரு வங்கியும் குறிப்பிட்ட எல்லை வரையில் கடன் பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டன. இல்லாவிடின் குறிப்பிட்ட எல்லை அத்தகைய

விஞ்சல் தொகையால் குறைக்கப்பட்டது. இலங்கையிலிருந்தான ஏற்றுமதிகளை நிதியீட்டுவதற்கு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களின் மீள்நிதியிடலுக்காக வர்த்தக வங்கிகளில் பெறப்பட்ட கடன்பாடுகளும் வரையறைக்குட்பட்டே இருந்தன. வங்கி வீதத்திலான கடன்பாட்டு எல்லைகளை விஞ்சி வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் ஆண்டிற்கு 21 சத வீதத்திலிருந்து 30 சத வீதம்வரையில் வேறுபட்டன. தண்டவீதங்களின் படிப்படியான அளவின் அடிப்படையில் தொடர்ந்தும் வழங்கப்பட்டதுடன் மிகை ஒவ்வொரு வங்கியினதும் வரையறுக்கப்பட்ட மட்டங்களுக்கும் மேலான கடன்பாட்டு எல்லையிலேயே தங்கியிருக்கும்.

நெல், காய்கறிகள், ஏனைய குறிப்பிட்ட பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தி தொடர்பான கூட்டுறவு நிறுவனங்களின் அல்லது தனிப்பட்டவர்களின் சலுகைக் கால வாக்குறுதிச் சான்றிதழ்களுக்கெதிராக வர்த்தக வங்கிகளுக்கு மத்திய வங்கியால் வழங்கப்பட்ட முற்பணங்களின் வட்டி வீதம் தொடர்ந்தும் ஆண்டொன்றிற்கு 1.5 சத வீதமாகவேயிருந்தது. நெல் கொள்வனவையும் உள்ளூரில் பயிரிடப்பட்ட ஏனைய சில குறிப்பிட்ட பயிர்களினது கொள்வனவையும், களஞ்சியப்படுத்தலையும் நிதியீட்டுவதற்காகக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும், கமநலப்டணி நிலையங்களுக்கும், அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களுக்கும் வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட முற்பணங்களுக்கெதிராக வர்த்தக வங்கிகளினால் சலுகைக் கால வாக்குறுதிச் சான்றிதழ்களை வைத்துப் பெறப்பட்ட வங்கி முற்பணங்களின் மீதான வட்டி வீதம் ஆண்டிற்கு 3 சத வீதமாக மாற்றமின்றி இருந்தது.

**அரசாங்கக் கணக்குகள்**

அரசின் வங்கியாளரான மத்திய வங்கி அரசாங்கக் கணக்குகளைத் தொடர்ந்தும் அரச திணைக்களங்கள், குறிப்பிட்ட சட்ட நியதிச்சபைகள் ஆகியவற்றில் கணக்குகளைப் பேணிவருகின்றது.

1982 டிசெம்பர் இறுதியில் அரச கணக்குக் கிளையிலுள்ள தொழிற்படும் கணக்குகளின் எண்ணிக்கை (அரச திணைக்களங்கள் 128, சட்ட நியதிச் சபைகள் 15) 143 ஆக விளங்கியது.

**திறைசேரி உண்டியல்கள்**

திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கி திறைசேரி உண்டியலில் அதன் கொடுக்கல் வாங்கல்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. வங்கி அதன் சொந்த முதலீட்டுப் பட்டியல்களிலிருந்து விற்பனை செய்வதுடன் வேறுபட்ட முதிர்ச்சித் தன்மை கொண்ட திறைசேரி உண்டியல்களையும் கொள்வனவு செய்கிறது. கழிவு வீதமானது வட்டியின் சந்தை வீதங்களுக்கு இணைவாகவும், பணச்சந்தை திரவ நிலைமைக்கு ஏற்பவும் ஒவ்வொரு வேலை நாட்களிலும் வேறுபடுகின்றது. இத்திட்டத்தின்கீழ் 1982 காலப் பகுதியில் ரூ. 487,019 இலட்சம் பெறுமதிகொண்ட திறைசேரி உண்டியல்கள் விற்பனை செய்யப்பட்ட

துடன் இதே காலப் பகுதியில் ரூ. 191,102 இலட்சங்கொண்ட தொகை கொள்வனவு செய்யப்பட்டது. இவ்வாண்டுக் காலப் பகுதியில் திறைசேரி உண்டியல்களின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கும் பொருந்தக் கூடிய கழிவு வீதங்கள் ஆண்டிற்கு 12 சதவீதத்திலிருந்து 16.25சதவீதம் வரையில் வேறுபட்டன. 1982 நவெம்பரிலிருந்து மத்திய வங்கியிலிருந்து திறைசேரி உண்டியல்களை நேரடியாகக் கொள்வனவு செய்வதற்கான விருப்புரிமை வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்டதுடன் தரகர்களின் தலையீடின்றி அவர்களாகவே நேரடியாகக் கழிவு செய்தும் பெற்றுக்கொள்ளலாம்.

### கட்டாயச் சேமிப்பு நிதியம்

மத்திய வங்கியானது 1971 இன் எண் 6 கொண்ட கட்டாயச் சேமிப்புக்கள் சட்டத்தினதும் 1972 இன் எண் 15 கொண்ட வருவாய், கட்டாயச் சேமிப்புக்கள் மீதான உச்ச வரம்புச் சட்டத்தினதும் நியதிகளில் சேகரிக்கப்பட்ட பணத்தின் பாதுகாவலனுகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் அரசின் சார்பாக கட்டாயச் சேமிப்பு நிதியத்தின் நிருவாகத்தையும் மேற்கொண்டது. இவ்வாண்டுக் காலப் பகுதியில் வங்கிபெற்ற 2,701 மீளளிப்பு விண்ணப்பங்களின்மீது உதவுதொகை செலுத்தியோருக்கு ரூ. 23,765,514.56 (வட்டியுட்பட) கொண்ட தொகை மீளச் செலுத்தப்பட்டது.

### நடுத்தர நீண்டதவணைக் கொடுகடன் நிதியம்

1982 ஆம் ஆண்டில் மத்திய வங்கி அதன் நடுத்தர, நீண்டதவணைக் கொடுகடன் நிதியத்தின் கீழ் மீள் நிதியிடல் திட்டத்தை தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. 1982 காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்ட மீள்நிதியிடல் கடன்களின் மொத்தம் 1981 இல் வழங்கப்பட்ட ரூ. 2,640 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 2,985 இலட்சங்களாக விளங்கியது.

### நாணய வெளியீடு

1982 திசெம்பர் 31 இல் மொத்த நாணயச் சுற்றோட்டம் ரூ. 68,565 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டின் தொடர்பான எண் தொகையான ரூ. 56,435 இலட்சத்தினை விட ரூ. 12,130 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. 1982ஆம் ஆண்டின் நாணயத்தாள் சுற்றோட்டம் முன்னைய ஆண்டினைவிட ரூ. 11,822 இலட்சத்தினுலும், குத்திகளின் சுற்றோட்டம் ரூ. 350 இலட்சத்தினுலும் அதிகரித்தன. 1981 திசெம்பர் பிற்பகுதியில் ரூ. 1,000 இன, 1982 பெப்புருவரி முற்பகுதியில் ரூ. 500 இன உயர் பெறுமதிமிக்க நாணயத்தாள்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் ரூ.20, ரூ. 50, ரூ.100 இன நாணயத் தாள்களின் சுற்றோட்டம் வெகுவாகக் குறைவடைந்தது. இவ்வினங்களின் சுற்றோட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி ரூ. 500, ரூ. 1,000 இன நாணயத் தாள்களின் சுற்றோட்டத்தில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பினுல் எதிரீடு செய்யப்பப்பட்டது. ரூ. 500, ரூ. 1,000 இனத்தாள்களின் சுற்றோட்டம் 1982 இறுதியில் முறையே ரூ. 9,690 இலட்சங்களாகவும், ரூ, 11,159 இலட்சங்களாகவும் விளங்கின.

அரசாங்கத்தினுல் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் விளைவாக, தற்போதைய விலங்கின தாவரத் தொடர்களுக்குப் பதிலாக நாட்டின் பண்டைய வரலாறு, பண்பாடு, பொருளாதார அபிவிருத்தி ஆகியனவற்றை எடுத்துக்காட்டும் ரூ 5, ரூ. 10, ரூ. 20, ரூ. 50, ரூ. 100 இன புதிய வடிவம் கொண்ட நாணயத்தாள்களை வெளியிடுவதற்கான நடவடிக்கை தொடங்கப்பட்டது. இத்தாள்கள் 1983 இன் முதலரைப் பகுதியில் சுற்றேட்டத்திற்கு விடப்படுவதுடன் இதன் விளைவாக தற்போதைய விலங்கின, தாவர தொடர்கள் படிப்படியாக இறுதியில் நீக்கப்படும்.

இரண்டு ரூபாத்தாள் நாணயத்தைக் குத்தி நாணயத்தின்மூலம் நீக்குவதற்கும் ரூ. 1, சதம் 50, 25 இன நாணயங்களின் குமிழ்மணி விளிம்புகளுக்குப் பதிலீடாக பல் வெட்டப்பட்ட பாதுகாப்பு விளிம்புகளை அமைப்பதற்கும் அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. 2 ரூபா நாணயத்தாள் குத்தியின் மூலம் நீக்கப்படுவது நாணய வெளியீட்டில் செலவைக் குறைத்திருக்கிறது. புதிய குத்தியின் பல்வெட்டப்பட்ட விளிம்புகள் பாதுகாப்பு நோக்கங்களைக் கொண்டதாகும்.

நாணயக் காட்சிச் சாலை ஒன்று 1982 ஏப்பிறலில் வங்கிக் கட்டடத்தில் அமைக்கப்பட்டது.

## வங்கித்தொழில் அபிவிருத்தியும் பயிற்சியும்

இலங்கையில் கிளைகளைத் திறப்பதற்கு வெளிநாட்டு வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் தொடர்ச்சியான ஆர்வம் காட்டியதுடன் இதுதொடர்பாக தொடர்ச்சியாக அடிக்கடி விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் வங்கித் தொழில் கூட்டு நிலையங்களை நிறுவுவதிலும்கூட இலங்கை வியாபார வட்டாரங்களினுல் ஆர்வம் காட்டப்பட்டது. 1982 இறுதியில் நான்கு இலங்கையர்களின் வங்கிகளுடன் இலங்கையில் தொழிற்படும் வங்கிகள் 25 ஆக விளங்கின. அத்துடன் முதற்றடவையாக வெளிநாட்டு வங்கிகளின் இரண்டு பிரதிநிதித்துவக் கிளைகளான பிலடெல்பியாவின் ஜிராட் வங்கி, நியூயோர்க் பாங்கர்ஸ் றஸ்ற் கம்பனி ஆகியன விளங்கின. நாட்டில் கிராமியக் கொடுகடன், வங்கித்தொழில் வசதிகளை விரிவாக்கும் நோக்குடன் இலங்கை வங்கிகளினுல் கிராமியத்துறைக்கு வழங்கப்பட்ட வங்கித்தொழில் வசதிகளுக்கு குறைநிரப்புவதற்குமாக இரண்டு வெளிநாட்டு வங்கிகளான இந்திய அரச வங்கியும், இந்தியன் ஓவசீஸ் வங்கியும் முறையே அநுராதபுரத்திலும், மாத்தறையிலும் தமது புதிய கிளைகளைத் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டன. நாட்டில் கிளைகளைத் திறப்பதனை ஒழுங்குபடுத்துவதற்கான வங்கித் தொழில் அபிவிருத்தித் திட்டத்தினை உருவாக்குவதற்கான வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்றன.

நூற்கல்வி, செயல்முறை இரண்டு துறைகளிலும் மத்திய வங்கி அலுவலர்களுக்கான பயிற்சி தொடர்ந்தும் நடைபெற்றது. நூற்கல்வி பாடநெறிகள் பட்டப்பின்படிப்பு கற்கைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டிருந்த வேளையில் நூற்கல்வியல்லாப் பயிற்சி மத்திய வங்கியின் பல திணைக்களங்களில் மேற்கொள்ளப்

படும் வேலை சார்ந்த செயல்முறைத் தொழிற்பாடுகளுடன் தொடர்புற்றதாக இருந்தது. அத்தகைய பயிற்சிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடத்தப் பெற்றன.

## வங்கி மேற்பார்வை

1982ஆம் ஆண்டில் 1982/83 காலப் பகுதிக்காக நாணய விதிச்சட்டத்தின் 29(1) பிரிவின்கீழ் பத்து வர்த்தக வங்கிகளின் பரீட்சிப்பைத் தொடங்கியது. இப்பரீட்சை களில் ஆறு இவ்வாண்டுக் காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டன. நாணயவிதிச் சட் டத்தின் 29 (2) பிரிவின் கீழ் 1981இல் தொடங்கப்பெற்ற வர்த்தக வங்கி தவிர்ந்த வங்கித் தொழில் நிறுவனமொன்றின் பரீட்சையையும் நிறைவு செய்தது.

நிதிக்கூட்டு நிலையங்கள் சட்டத்தின் கட்டுப்பாட்டு விதிகளின் கீழ் நாணயச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட நிதிக் கூட்டு நிலையங்களையும் மேற்பார்வை செய் வதும் பரீட்சிப்பதும் 1982இலும் தொடர்ந்தது. இச்சட்டத்தின் பிரிவு 15 (1) இன் கீழ் ஏழு நிதிக் கூட்டு நிலையங்களைப் பரீட்சிக்கும் வேலைகள் இவ்வாண்டுக் காலத்தில் தொடங்கியதுடன் அவற்றில் மூன்றின் பரீட்சைகள் முற்றுப்பெற் றன. 1981இல் தொடக்கப்பட்ட நிதிக் கூட்டு நிலையத்தின் பரீட்சிப்பும்கூட இவ்வாண்டுக் காலத்தில் முடிவுற்றது. இச்சட்டத்தின் கீழ் நிதிக்கூட்டு நிலையங் களிலிருந்து பதிவு செய்வதற்காகப் பெற்ற விண்ணப்பங்கள் மதிப்பிடப்பட்ட துடன் இவ்வாண்டில் இரண்டு கூட்டு நிலையங்கள் நாணயச் சபையுடன் பதிவு செய்யப்பட்டன. இச்சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் நிதிக் கூட்டு நிலையங் களுக்குப் பணிப்புரைத் தொகுப்பொன்று நாணயச் சபையினால் 1982 யூனில் வழங்கப்பட்டது. 1982 ஓகத்து 1 இலிருந்து நடைமுறைக்கு வந்த இப்பணிப் புரைகள் ஏனைய விடயங்களுடன், வைப்புக்கள் ஏற்றுக் கொள்வதற்கான ஆகக் குறைந்த கூடிய காலப்பகுதி, பேணப்பட வேண்டிய திரவச் சொத்துக்களின் குறைந்த மட்டங்கள், பிணைகளற்ற அடிப்படையில் வழங்கப்படத்தக்க கடனின் ஆகக் கூடிய தொகை, தனிப்பட்ட ஒரு கடன் பெறுநருக்கு வழங்கப்படத்தக்க ஆகக் கூடிய கடன் தொகை, வைப்புப் பொறுப்புக்கள் தொடர்பான ஆகக் குறைந்த மூலதனம், இலாபங்களிலிருந்தான ஒதுக்குகளுக்கான மாற்றல்கள் அற விட முடியாத ஐயத்திற்கிடமான கடன்களுக்கான ஏற்பாடு, அசையாச் சொத் துக்களின் கொள்வனவிற்கான எல்லைகள் ஆகியவற்றுடன் தொடர்புள்ளனவாக இருந்தன.

வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளி னால் நிறுவப்பட்ட வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் கொடுக் கல் வாங்கல்களை மேற்பார்வை செய்யும் அதன் நிகழ்ச்சித்திட்டமும் மீளாய்விற் குரிய ஆண்டில் தொடர்ந்து நடைபெற்றன.

## அபிவிருத்தி நிதி

1982 இல் முதற் காலாண்டில் வங்கித் தொழில் நிறுவனங்கள் நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தினுல் வழங்கப்பட்ட மீள் நிதியிடல் வசதி களைப் பெருமளவிற்கு நாடின. எனினும் ஆண்டின் பிற்பகுதியில் நிலவிய வங் கித் தொழிற்றுறையின் மிகையான திரவ நிலைமையின் விளைவாக நடுத்தர' நீண்டகால மீள் நிதியிடல் வசதிகளுக்கான கேள்வி குறைவடைந்தது. சுற்றுலா தொடர்பான செயற்றிட்டங்களுக்கு மிகக் கூடியளவிற்குத் தெரிந்தெடுக்கப்பட்ட ஒப்புதல்கள் வழங்கப்பட்டமையும் இவ்வீழ்ச்சிக்கு உதவின.

ஏற்றுமதி சார்ந்த செயற்றிட்டங்களின் முதலீடுகளுக்காக மீள் நிதியிடல் திட்டத்தின் பயன்பாட்டினை அதிகரிப்பதன் பொருட்டு மீளாய்விற்குரிய ஆண் டில் அபிவிருத்தி நிதித் திணைக்களம் வர்த்தக வங்கிகளுடனும் அதே போன்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடனும் நெருக்கமாக இணைந்து தொழிலாற்றியது. இந்நோக்கினை மனதில் கொண்டு மத்திய வங்கி 1982 சனவரியில் வழங்கப்பட்ட வங்கிக் கடன்களின் 100%ற்கு மீள் நிதியிடலை அதிகரித்ததுடன் இவ்வாண்டில் யூலை தொடக்கம் வங்கிகள் மீண்டும் கடன் வழங்கும் வீதம் ஒரே சீரான 2 சத வீதமாக நிர்ணயிக்கப்பட்டது.

உத்தரவாதங்களின் வழங்கலை நிறைவேற்றும் பொருட்டு இரண்டு கொடு கடன் உத்தரவாதத் திட்டங்களான சிறியளவு கைத்தொழில்கள், சிறிய நடுத் தர அளவுக் கைத்தொழில்கள் (i) உத்தரவாதத் திட்டங்கள் 1982இன் பின் உத் தரவாத நிலைக்குப் புகுத்தப்பட்டன. இரண்டாவது சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் கடன் திட்டமும் (ii) தேசிய அபிவிருத்தி வங்கியினுல் மீள் நிதி யிடப்பட்டு மத்திய வங்கியினுல் உத்தரவாதமளிக்கப்பட்டு 1982 இல் தொழிற் படத் தொடங்கியது.

### நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்தின் தொழிற்பாடுகள்

வகை II இன் கீழ் 1982 இல் 17 ஏற்றுமதி சார்ந்த செயற்றிட்டங்களுக்காக ரூபா 977 இலட்சங் கொண்ட தொகைக்கான மீள் நிதியிடலுக்கு மத்திய வங்கி ஒப்புதலளித்தது. இது 1981 இல் விரிவாக்கப்பட்ட 10 செயற்றிட்டங்களுக்கான ரூபா 320 இலட்சங் கொண்ட மீள் நிதியிடல் வசதிகளுடன் ஒப்பிடத்தக்கது. வகைகள் III, IVஇன் கீழ் 43 விண்ணப்பங்கள் தொடர்பாக ரூபா 1,319 இலட்சம் வரையிலான மீள் நிதியிடலுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது. இது 1981 இல் 152 விண்ணப்பங்கள் தொடர்பான ரூபா 2,609 இலட்சம் கொண்ட மீள் நிதியிடல் ஒப்புதல்களுடன் ஒப்பிடத்தக்கது. நடுத்தர நீண்ட காலக் கொடுகடன் நிதியத் தின் வகைகள் II, III, IV இன்கீழ் மீள்நிதியிடல் விண்ணப்பங்களுக்கு ஒப்புத லளிக்கும் மேலாண்மையை வங்கியின் அபிவிருத்தி நிதித் திணைக்களம் தொடர்ந்

தும் கொண்டிருந்தது. ஒப்புதலளிக்கப்பட்ட மீள்நிதியிடல் வசதிகளின் துறைவாரி யான பகுப்பாய்வு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2

**வகைகள் II-IV இன் கீழ் மீள்நிதியிடலின் நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதிய ஒப்புதல்கள்**

ரூபா பத்து இலட்சம்

| | 1980 | | 1981 | | 1982 | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் தொகை | மீள் நிதியிடப்பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதியிடப்பட்ட தொகை | கடன் தொகை | மீள் நிதியிடப்பட்ட தொகை |
| வகை II | | | | | | |
| ஏற்றுமதித் துறை ... | — | — | 35.4 | 32.0 | 97.7 | 97.7 |
| வகை III உம் iv உம | | | | | | |
| அ. வேளாண்மை ... | 1.0 | 0.7 | 30.8 | 19.1 | 1.0 | 1.0 |
| ஆ. கைத்தொழில் ... | 62.1 | 49.0 | 76.1 | 68.1 | 65.0 | 53.4 |
| இ. உணவகம் ... | 52.0 | 36.0 | 105.0 | 83.0 | 75.3 | 72.5 |
| ஈ. ஏனையவை ... | 60.0 | 36.0 | 147.8 | 90.7 | 8.3 | 5.0 |
| மொத்தம் | 175.1 | 121.7 | 395.1 | 292.9 | 247.3 | 229.6 |

நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியத்தின் கீழ் மீள் நிதியிடல் விண்ணப் பங்களுக்குப் பொருந்தத்தக்க நியதிகள், நிபந்தனைகளின் தொகுப்பு 1982 இறுதி யிலுள்ளபடி கீழே காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.3

**வகைகள் I - IV இன் கீழ் மீள் நிதியிடலின் நடுத்தர நீண்டகால கொடுகடன் ஒப்புதல்களுடன் தொடர்பான காலங்கள்**

| | மீள் நிதியிடல் அளவு மொத்தக் கடனின் சதவீதம் | கடனின் காலம் (ஆண்டுகள்) | மீள் நிதியிடலின் வட்டி வீதம் (அ) செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 50 இலட்சமும் அதற்குக்கீழும் % | மீள் நிதியிடலின் வட்டி வீதம் (ஆ) செயற்றிட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 50 இலட்சத் திற்கு மேல் % | கொடுகடன் நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்ட எல்லை % | செயற்றிட்டத்தின் மொத்தச் செலவினத்திற்கான தொழில் முயற்சியொன்று செலுத்தவேண்டிய ஆகக்குறைந்த தொகை % |
|---|---|---|---|---|---|---|
| வகை I | 100 | 3—15 | 8½ | 8½ | 4 | 10 |
| வகை II | 100 | 3—15 | 10 | 11 | 2 | 20 |
| வகை III | 60 | 3—15 | 11 | 11 | 5 | |
| வகை IV | 60 | 3—15 | 13 | 13 | 5 | |

**சிறியளவு கைத்தொழில்கள் கொடுகடன் உத்தரவாதத் திட்டம்**

சிறியளவு கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதத் திட்டம் 1978 ஏப்பிற லில் தொழிற்படத் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் சிறிய கைத்தொழில் களுக்கு பங்கேற்கின்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் கைத் தொழில் அபிவிருத்திச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டன. அரசின் சார்பில்

மத்திய வங்கி உத்தரவாதங்களை வழங்கியது. உத்தரவாதங்களின் வழங்கல் 1981 இல் முற்றுப்பெற்றது. இத்திட்டத்தின் கீழ் ரூபா 312 இலட்சம் தொகை கொண்ட கடன்களை உள்ளடக்கத்தக்க விதத்தில் 767 உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன. உத்தரவாதத்தின் அளவு, செலுத்தத் தவறிய கடனின் 75 சதவீதமாக இருந்தது.

சிறிதளவு கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதத்திட்டத்தின் தற்போதைய நிலைமையின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.4

சிறிய அளவு கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதத் திட்டம்

ரூ. பத்து இலட்சம்

| | உத்தரவாதங்களின் எண்ணிக்கை | உள்ளவாறு நிலைமை | |
|---|---|---|---|
| | | 81.12.31 | 82.12.31 |
| (i) வழங்கப்பட்ட கடன்கள் .. | 767 | 31.2 | 31.2 |
| (ii) முழுமையாகச் செலுத்தப்பட்ட கடன்கள் .. | 246 | வி.கி. | 3.9 |
| (iii) புறக்கீடு செய்யப்பட்ட / காலங்களுக்கிடைப்பட்ட உத்தரவாதங்கள் .. | 59 | வி.கி. | 3.2 |
| (iv) வெளிநிற்கும் நிலுவை (வங்கிகளால் அறிவிக்கப் படடவாறு) .. | 462 | 17.1 | 13.22 |
| (v) இடர்க்காப்பின்மை (75%இல்) | | 12.8 | 9.92 |
| (vi) மொத்தக் கடன்களில் இடர்க்காப்பின்மையின் % .. | | 41 % | 32 % |

1982 காலப்பகுதியில் 246 கடன் பெற்றோரினால் செலுத்தப்பட்ட கடன்களின் மொத்த மீள் கொடுப்பனவு ரூபா 39 இலட்சம் கொண்ட உத்தரவாதப் பொறுப்பினைத் தீர்ப்பனவு செய்தது. அத்துடன் இக்காலப் பகுதியில் மத்திய வங்கியால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை நிறைவேற்றாத காரணத்தினால் ரூ. 32 இலட்சம் தொகை கொண்ட 59 உத்தரவாதங்கள் புறக்கீடு செய்யப்பட்டவையாகவோ அல்லது காலங் கடந்தவையாகவோ கருதப்பட்டன. கடன் வழங்குகின்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட காலாண்டு அறிக்கைகளின்படி தற்போதிருக்கும் 462 உத்தரவாதங்கள் தொடர்பாக வெளிநிற்கும் நிலுவையின் தொகை ரூபா 132 இலட்சங்களாகும். எனினும் இவை வங்கிகளினால் ஒப்படைக்கப்பட்ட ரூபா 12 இலட்சங்கொண்ட 39 கோரல்களையும் உள்ளடக்கும். 1982 திசெம்பர் இறுதியில் இவ்விண்ணப்பங்கள் பரிசீலனையின்கீழ் இருந்தன.

## சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் (I) கொடுகடன் உத்தரவாதத் திட்டம்

முதலாவது சிறிய, நடுத்தர அளவுக் கைத்தொழில் (I) கொடுகடன் உத்தரவாதத் திட்டம் 1979 ஒற்ரேபரில் தொழிற்படத் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழ் பங்களிக்கும் கொடுகடன் நிறுவனங்களினுல் வழங்கப்பட்ட கடன்கள் பன்னுட்டு அபிவிருத்தி அமைப்பின் ஐ. அ. டொலர் 120 இலட்சங்கொண்ட கொடுகடன் தொகையின் உதவியுடன் தேசிய அபிவிருத்தி வங்கியினுல் மீள் நிதியிடப்பட்டன. நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 108இன் கீழ் வங்கிகளால் வழங்கப்பட்ட இவ்வொவ்வொரு கடனும் ஆகக் கூடிய ரூ. 400,000 ஆக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் 60 சத வீதமளவிற்கு மத்திய வங்கியினுல் உத்தரவாதமளிக்கப்பட்டன. 1982இல் வழங்கப்பட்ட 152 உத்தரவாதங்களையும் உள்ளடக்கி 1982 முடிவில் மத்திய வங்கி 1,541 உத்தரவாதங்களையும் வழங்கியது. இவ்வுத்தரவாதங்களின் கீழான மொத்தப் பொறுப்பு ரூ. 1,400 இலட்சங்களாக விளங்கியது. வழங்கப்பட்ட சிறிய நடுத்தரக் கைத்தொழில் (I) கொடுகடன் உத்தரவாதங்களின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.5

சிறிய நடுத்தரக் கைத்தொழில் I இன் கொடுகடன் உத்தரவாதத் திட்டம்

ரூ. பத்து இலட்சம்

| | உத்தரவாதங்களின் எண்ணிக்கை | 31.12.82இல் உள்ளவாறு நிலைமை |
|---|---|---|
| (i) வழங்கப்பட்ட கடன்கள் ... | 1,541 | 253.7 |
| (ii) முழுமையாகச் செலுத்தப்பட்ட கடன்கள் .. | 37 | 2.7 |
| (iii) புறக்கீடு செய்யப் ட்ட/காலங்கடக்க விடப்பட்ட உத்தரவாதங்கள் ... | 9 | 1.3 |
| (iv) வெளிநிற்கும் நிலுவை (வங்கிகளால அறிவிக்கப்பட்டவாறு) .. | 1,495 | 195.1 |
| (v) இடர்க்காப்பின்மை (ஆகக்கூடியது ரூ. 400,000 என்ற ரீதியில் 60 வீதம் | | 110.3 |
| (vi) வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் இடர்க்காப்பின்மையின் சதவீதம் | | 43% |

சிறிய நடுத்தர கைத்தொழில் (I) திட்டத்தின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்களின் கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு கீழேயுள்ள அட்டவணை 2.6இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.6

## சிறிய நடுத்தரக் கைத்தொழில் - 1இன் திட்டத்தின்கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்களின் கைத்தொழில்படியான பகுப்பு

ஆயிரம் ரூபாய்களில்

| கைத்தொழில்கள் | 1979 - 1982 | | | 1982 | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட மொத்தக்கடன்கள் | உத்தரவாத மளிக்கப்பட்ட தொகை | கடன்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் | உத்தரவாத மளிக்கப்பட்ட தொகை |
| 1. நெல் குத்துதல் .. | 331 | 49,548 | 29,176 | 40 | 8,297 | 4,898 |
| 2. மென் பொறியியல் கைத்தொழில்கள் .. | 163 | 22,954 | 12,772 | 22 | 4,413 | 2,448 |
| 3. செங்கட்டிகளும் ஏனைய கட்டிடப் பொருட்களும் .. | 252 | 50,906 | 28,451 | 13 | 4,230 | 2,361 |
| 4. தைக்கப்பட்ட உடுப்புக்ள், பத்திக், கைத்தறி விரிப்புகள் இன்னோன்னவை .. | 132 | 19,205 | 10,065 | 11 | 3,722 | 1,813 |
| 5. இறப்பரும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களும் | 27 | 7,921 | 3,873 | 5 | 2,603 | 1,162 |
| 6. காலணிகளும் ஏனைய தோல் உற்பத்திகளும் | 18 | 2,366 | 1,370 | 2 | 448 | 269 |
| 7. பனங்கட்டியும், கரும்பு உற்பத்திகளும் .. | 6 | 233 | 140 | — | — | — |
| 8. தளபாடங்களும் ஏனைய மர உற்பத்திகளும் .. | 79 | 8,246 | 4,794 | 9 | 1,255 | 753 |
| 9. தும்பும் தும்பை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளும் .. | 95 | 9,191 | 5,494 | 5 | 911 | 547 |
| 10. எழுதுகருவிகளும் ஏனைய தாளுற்பத்திகளும் | 23 | 4,063 | 2,238 | 2 | 1,150 | 490 |
| 11. உணவும் குடிபானங்களும் .. | 76 | 16,266 | 8,082 | 10 | 5,365 | 2,419 |
| 12. பூச்சுக்கள், மினுக்கிகள், வண்ணமெழுது எண்ணெய் இன்னோரன்னவை ... | 9 | 3,277 | 1,631 | 3 | 1,232 | 604 |
| 13. வானொலி, ஈருருளிகள் ஆகி வற்றிற்கான உதிரிப்பாகங்கள் ... | 12 | 1,508 | 880 | 3 | 117 | 70 |
| 14. சவர்க்காரம் ஏனைய குளியலறைப்பொருட்கள் | 29 | 1,616 | 969 | — | — | — |
| 15. கைப்பணிப் பொருட்களும். பொம்மைகளும் | 21 | 808 | 484 | — | — | — |
| 16. சுருட்டுகளும், பீடிகளும் .. | 6 | 48 | 28 | — | — | — |
| 17. மீன்பிடி வள்ளங்களும், உள்ளூர் கடற்றொழிலும் . | 7 | 4,400 | 1,900 | — | — | — |
| 18. நகைகளும் இரத்தினக் கற்களும் ... | 11 | 656 | 394 | 1 | 20 | 12 |
| 19. விளையாட்டுப் பொருட்கள் ... | 3. | 94 | 56 | — | — | — |
| 20. வேளாண்மைப் பொருட்கள் ... | 10 | 2,702 | 1,221 | 1 | 85 | 51 |
| 21. கண்ணாடியும் ஏனைய கண்ணாடி உற்பத்திகளும் | 7 | 1,166 | 700 | 1 | 115 | 69 |
| 22. பித்தளையும் அலுமினியப் பொருட்களும் ... | 44 | 6,428 | 3,311 | — | — | — |
| 23. மரம் அரிதல் ... | 46 | 8,879 | 5,320 | 6 | 840 | 516 |
| 24. அச்சகம் ... | 38 | 10,346 | 5,561 | 6 | 940 | 540 |
| 25. பல்வகை ... | 96 | 20,898 | 11,190 | 12 | 4,557 | 2,158 |
| மொத்தம் | 1,541 | 253,725 | 140,100 | 152 | 40,300 | 21,180 |

## சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்களின் (II) கொடுகடன் உத்தரவாதத் திட்டம்

இரண்டாவது சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் கொடுகடன் உத்தரவாதத் திட்டம் 1982 சனவரியில் தொழிற்படத் தொடங்கியது. இத்திட்டத்தின் கீழும் பங்களிக்கும் கொடுகடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கும் விதத்தில் மத்திய வங்கியினால் உத்தரவாதங்கள் வழங்கப்

பட்டு நேசிய அபிவிருத்தி வங்கியினுல் மீள்நிதியிடப்பட்டது. பன்னுட்டு அபிவிருத்தி அமைப்பின் ஐ. அ. டொலர்கள் 300 இலட்சம் கொண்ட தொகை மீள்நிதியிடுகின்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் வர்த்தக வங்கிகளால் கடன்கள் பகிர்ந்தளிக்கப்படுவதற்கு முன் மத்திய வங்கியால் உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன. எனினும் கடனின் முதற்றவணை கடன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்ட நாளன்று அதன் மீதான உத்தரவாதக் கட்டணம் கடனின் முதற்றவணைக் கடன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்ட நாளிலிருந்து 60 நாட்கள் முடிவடைவதற்கு முன் மத்திய வங்கிக்கு செலுத்தப்பட்டால் மட்டுமே உத்தரவாதம் உள்ளடக்கும் தொகை வலுமிக்கதாயிருக்கும். மேலும் இத்திட்டத்தின்கீழ் எந்தவொரு செயற்றிட்டத்திற்குமான ஆகக் கூடிய கடன்தொகை ரூ. 20 இலட்சமாகும். சிறிய நடுத்தரக் கைத்தொழில் (I) திட்டத்தின்கீழ் ஆகக் கூடிய கடன் தொகை ரூ. 10 இலட்சமாக இருந்தது. கடன்பெறுநரிடமிருந்தும் அறவிடவேண்டிய வட்டி வீதம் முதலில் 18 சத வீதத்தில் நிர்ணயிக்கப்பட்டதெனினும் இறுதியில் 20 சத வீதத்திற்கு உயர்த்தப்பட்டது. வட்டி வீதங்கள் ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் மீளாய்வு செய்யப்படுகின்றன. 164 உத்தரவாத விண்ணப்பங்கள் மட்டுமே மத்திய வங்கியால் பெறப்பட்டதுடன் அவற்றின் 152 விண்ணப்பக்காரர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் உத்தரவாதங்கள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்களின் கைத்தொழில் அடிப்படையிலான பகுப்பாய்வு கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.7

**1982 இல் வழங்கப்பட்ட சிறிய நடுத்தரக் கைத்தொழில் IIஇன் கொடுகடன்கள்**

| | கடன்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக்கப்பட்ட தொகை ரூ. '000 | உத்தரவாதமளிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. உணவு பதப்படுத்தல் | 49 | 6,882 | 4,129 |
| 2. ஏனைய வேளாண்மைக் கைத்தொழில்கள் | 05 | 649 | 389 |
| 3. இறப்பர் உற்பத்திகள் | 03 | 600 | 360 |
| 4. உலோக உற்பத்திகள் | 33 | 3,982 | 2,389 |
| 5. கட்டடப் பொருட்கள் | 03 | 255 | 153 |
| 6. கட்டடவாக்க ஒப்பந்தம் | — | — | — |
| 7. மர உற்பத்திகள் | 18 | 4,931 | 2,959 |
| 8. ஆடைகள் | 09 | 1,061 | 636 |
| 9. புடவைகள் | 03 | 755 | 453 |
| 10. தொழிற்கூடத்திருத்தல் | 01 | 30 | 18 |
| 11. பல்வகை | 28 | 5,614 | 3,369 |
| மொத்தம் | 152 | 24,759 | 14,855 |

## கிராமியக் கொடுகடன்

மத்திய வங்கி அதன் நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்தியதுடன் 1982 ஆம் ஆண்டில் நாட்டின் கிராமியக் கொடுகடனை மேற்பார்வை செய்வதிலும் ஊக்கு விப்பதிலும் மிகப்பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது. வங்கியின் கிராமி யக் கொடுகடன் திணைக்களம் கிராமியக்கொடுகடன் மதியுரைச் சபைக்கு பணியாற் றியதுடன் 1982இல் அதன் செயலகமாகத் தொழிற்பட்டது. ஒரு தேசிய வேளாண் மைக் கொடுகடன் ('நிலையான') நிதியத்தை ஏற்படுத்துவதற்கான விருப்பார்வம், நடைமுறைச் சாத்தியம் என்பவற்றிற்கிடையேயான தன்மைகளைச் சபை ஆராய்ந் தது. 1982 இல் வர்த்தக வங்கிகள், கூட்டுறவு கிராமிய வங்கிகளின் வேளாண் மைக் கடன் சொத்துப்பட்டியல்களின் பரிசோதனை நிகழ்ச்சித் திட்டமொன்று மத்திய வங்கியால் தொடக்கிவைக்கப்பட்டது. மக்கள் வங்கியின் மூன்று கிளை களும், இலங்கை வங்கியின் இரண்டு கிளைகளும், இரண்டு கிராமியக் கூட்டுறவு வங்கிகளும் இவ்வாண்டுக் காலத்தில் பரீட்சிக்கப்பட்டன.

இலங்கைக் கிராமியக் கொடுகடன் செயற்றிட்டத்தின் (ஆசிய அபிவிருத்தி வங்கி) நடைமுறைப்படுத்தல் செயற்பாடுகள் 1982 ஆம் ஆண்டில் திருப்திகரமா யிருந்தன. நான்கு சில்லு உழவுப் பொறிகள், இரண்டு சில்லு உழவுப்பொறிகள் நீர் இறைக்கும் பொறிகளின் வழங்கலுக்காகக் கேள்விப் பத்திரங்கள் கோரப் பட்டதுடன் ஒப்பந்தங்கள் 1983 ஆம் ஆண்டு சனவரியில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய நிறைவேற்று முகவராண்மைகளால் கைச்சாத்திடப்படும். இச்செயற் றிட்டத்தின் கீழ் சுமைகளை இழுக்கும் விலங்குகளுக்கான திட்டமும் 1982இல் பெரும் முன்னேற்றத்தையடைந்தது. மீளாய்விற்குரிய ஆண்டில் இச்செயற்றிட் டத்தின் நீர்ப்பாசனக்கூறும் திருப்திகரமான செயற்பாட்டைக் கொண்டிருந் ததுடன் தொடக்க வேலைகள் முற்றுப்பெற்றன.

வேளாண்மைக்கும் அதனுடன் தொடர்புற்ற நடவடிக்கைகளுக்குமான பல கொடுகடன் திட்டங்கள் 1982 ஆம் ஆண்டில் மத்திய வங்கியிலிருந்தும் மீள் நிதி யிடலுக்கான ஒப்புதல்களைப் பெற்றன. நடுத்தர, நீண்ட கால கொடுகடன் நிதியத் தின்வகை ஒன்றின் கீழ் இத்திட்டங்களுக்கான மீள் நிதியிடலின் மொத்த ஒதுக்கு ஏறத்தாள ரூ. 1560 இலட்சங்களாக விளங்கின. தற்பொழுது தொழிற்பாட்டி லிருக்கும் பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட மீள் நிதியிடலின் மொத்த அளவு 1981இல் ரூ. 4,860 இலட்சங்களிலிருந்து 1982இல் ரூ. 6.420 இலட்சங் களுக்கு அதிகரித்தது.

பின்வருவது 1982ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட திட்டங்களின் தொகுப் பாக இருக்கின்ற வேளையில் தொழிற்பாட்டிலிருக்கும் அனைத்துத் திட்டங்களின் மீதுமான மேலதிக புள்ளிவிபரத்தரவுகள் அட்டவணை 2.8இல் தரப்பட்டுள்ளன.

1. இலங்கைக் கிராமியக் கொடுகடன் செயற்றிட்டக் கடன் திட்டம் (மீள் நிதியிடல் ஒதுக்கு ஏறத்தாள ரூ. 1370 இலட்சம்)

அ. நான்கு சில்லு உழவுப் பொறிகள், கருவிகள் ஆகியவற்றின் கொள்வனவு;

ஆ. இரண்டு சில்லு உழவுப் பொறிகள், கருவிகளின் கொள்வனவு;

இ. வலுத்தெளி கருவிகளின் கொள்வனவு;

ஈ. திறந்த அகழப்பட்ட கிணறுகளின் அமைப்பிற்கும் நீரிறைக்கும் பொறியின் கொள்வனவிற்கும், அத்துடன்,

உ. சுமை இழுக்கும் விலங்குகள், வேளாண்மைக்கருவிகளின் கொள்வனவு.

2. தேயிலை சிறு உடைமையாளர்களுக்கான வள்மாக்கிக் கொடுகடன்திட்டம்; (மீள் நிதியிடல் ஒதுக்கு ரூ. 75 இலட்சம்)

3. இலங்கைக் கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படாத மாவட்டங்களில் சுமை இழுக்கும் விலங்குகளின் கொள்வனவு நிதியிடலுக்கான கொடுகடன் திட்டம் (மீள் நிதியிடல் ஒதுக்கு ரூ. 56 இலட்சம்);

4. அநுராதபுர மாவட்டத்தின் கிராம ஏற்பு, சுயதொழில் வாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ்இனம் காணப்பட்ட செயற்றிட்டங்களின் நிதியிடலுக்கான கொடுகடன் திட்டம் (மீள் நிதியிடல் ஒதுக்கு ரூ. 60 இலட்சம்);

மேற் குறிப்பிடப்பட்டவற்றுடன் கடற்றொழில்துறை வங்கி நிதியிடல் திட்டத்தின் கீழ் கிடைக்கச் செய்யப்பட்டிருந்த மீள் நிதியிடலுக்கான ஒதுக்கு 1982 இல் ரூ. 330 இலட்சத்தினல் உயர்த்தப்பட்டது. ஆகவே கடற்றொழிலுக்கான கிடைக்கத் தக்கதாயிருந்த மீள்நிதியிடலின் மொத்த அளவு ரூ. 1400 இலட்சத்திற்கு உயர்ந்தது. அத்துடன் காற்றூடி ஆலையின் கொள்வனவு இணைப்பு நீர்ப்பாசனத்தின்பொருட்டு நீரைத் தேக்கி வைக்கும் தொட்டிகள் கால்வாய்களை அமைத்தல் ஆகியவற்றிற்கு வேளாண்மையாளர்களுக்கு உதவுவதற்கான கொடுகடன் திட்டம் 1981 இல் ஒப்புதலளிக்கப்பட்டதுடன் ரூ. 26 இலட்சங்கொண்ட மீள்நிதியிடல் ஒதுக்குடன் 1982 இல் தொழிற்பாட்டிற்கு வந்தது.

பாற்பண்ணை அபிவிருத்தி தொடர்பாக நுவரெலியா மாவட்டத்திலுள்ள வேளாண்மையாளர்களுக்கு உதவுவதற்காக இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் அம்பாறை, மட்டக்களப்பு, இரத்தினபுரி போன்ற மாவட்டங்களையும் உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டது. அத்துடன் அட்டன் நெசனல் வங்கியும் இத்திட்டத்தின் கீழ் பங்குபெறும் வங்கியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இதன் தொழிற்பாட்டுப் பிரதேசமாக நாவலப்பிட்டித் தேர்தல் தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனராகலை மாவட்டங்களிலுள்ள கிளைகளின் சுயதொழில் வாய்ப்பை ஊக்குவிப்பதற்காக கொடுகடன் திட்டத்தின் விரிவிற்கு மத்திய வங்கியும் மீளாவிற்குரிய காலத்தில் ஒப்புதலளித்தது.

## அட்டவணை 2.8

### மத்திய வங்கியின் மீள் நிதியிடல் திட்டத்தின் வகை 1இன் கீழ் நாணயச் சபையினால் மீள் நிதியிடலுக்காக ஒப்புதலளிக்கப்பட்ட கடன் திட்டங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| கடன் திட்டத்தின் பெயர் | மீள் நிதியிடல் ஒதுக்கீடுகள் | 31-12-82 இல் பயன்படுத்தப்பட்ட தொகை | 31-12-82 இல் பயன்படுத்தப்பட்ட தொகை | செயற்றிட்டம் தொடங்கிய நாள் | ஒதுக்கீடுகளின் பங்கீட்டுக்கான காலப் பகுதி ஆண்டுகள் |
|---|---|---|---|---|---|
| **அ. 1982 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கொடுகடன் திட்டங்கள்** | | | | | |
| 1. ஒகிட் மரச் செய்கை இலங்கை வங்கி/வரையறுக்கப்பட்ட இலங்கை புகையிலைக் கூட்டு நிலையத்திற்கான கொடுகடன் திட்டம் .. | 4.50 | 3.45 | 1.05 | 03.01.79 | 3 |
| 2. தெங்கு வளமாக்கிக் கொடுகடன் திட்டம்... | 50.00 | 42.48 | 7.52 | 26.03.79 | 3 |
| 3. கடற்றொழில்துறை வங்கி நிதியிடல் திட்டம் | 140.00[1] | 111.12 | 28.88 | 02.07.79 | 3 |
| 4. குள நீர்ப்பாசனம் நவீனமயப்படுத்தல் செயல்திட்டம் ... | 7.69 | 7.69 | — | 02.06.79 | 1 |
| 5. நுவரெலியா மாவட்டத்தில் பாற்பண்ணை அபிவிருத்திக்கான கடன் திட்டம் .. | 10.00 | 5.25 | 4.75 | 22.08.79 | 3 |
| 6. குருநாகல் மாவட்டத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராம அபிவிருத்தி செயற்றிட்டத்திற்கான பண்ணைப்பொறித் தொகுதித் திட்டம் .. | 40.00 | 15.17 | 24.53 | 28.10.79 | 5 |
| 7. சம்மாந்துறைத் தேர்தல் தொகுதியின் பாற்பண்ணை அபிவிருத்தி(முன்னோடி )ச் செயற்றிட்டத்திற்கான கடன் திட்டம் . | 0.12 | — | 0.12 | 27.11.79 | 3 |
| 8. மகாவலி செயற்றிட்டப் பகுதியில் குடியேறியவர்கள் இழுபொறிகளைக் கொள்வனவு செய்வதற்கு உதவும் கொடுகடன் திட்டம் | 55.00 | 5.20 | 49.80 | 19.11.79 | 3 |
| 9. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் நிறுவப்படும் வளமாக்கி களஞ்சியங்களுக்கான கொடுகடன் திட்டம் ... | 14.00[2] | 6.47 | 7.53 | 13.10.80 | 1 |
| 10. அபுதாபியினால் நிதியளிக்கப்பட்ட வடமேற்குக் கரைக்கடற்றொழில் அபிவிருத்தித் திட்டம் ... | 60.00 | — | 60.00 | 13.10.80 | 3 |
| 11. ஒகிட் பயிர்ச்செய்கைகளின் கொடுகடன் திட்டம் மக்கள் வங்கி/சர்வோதய/லக்சல | 3.00 | 0.20 | 2.80 | 10.12.80 | 5 |
| 12. கடற்றொழில் கூட்டுறவு நிலையங்களுக்கான கொடுகடன் திட்டம் ... | 42.00[3] | — | 42.00 | 28.04.81 | 2 |
| 13. மாத்தளை, புத்தளம், மாவட்டங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் ... | 54.23 | 3.40 | 50.83 | 08.05.81 | 6 |
| 14. காற்றாடி ஆலைகளுக்கு நிதியிடலுக்கான கொடுகடன் திட்டம் ... | 2.56 | — | 2.56 | 11.12.81 | 1 |
| 15. மாத்தறை மாவட்டத்தில் இளைஞர் சுய தொழில் வாய்ப்புத் திட்டம் ... | 2.70 | 0.12 | 2.25 | 10.04.81 | — |
| 16. இறடப்பொல, உடஅபறெக்க கிராம எற்புத் திட்டம் .. | — | — | — | 16.03.81 | — |
| **ஆ. 1982ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் திட்டங்கள்** | | | | | |
| 1. இலங்கை கிராமிய கொடுகடன் செயற்றிட்டக் கடன் திட்டம் ... | 137.00 | — | 137.00 | 01.07.82 | 1 |
| 2. தேயிலை சிறு உடமையாளர்களுக்கான வளமாக்கிக் கொடுகடன் திட்டம் ... | 7.50 | — | 7.50 | 11.08.82 | 1 |
| 3. இலங்கை கிராமிய கொடுகடன் செயற்றிட்டத்திற்குள் அடங்காத மாவட்டங்களில் வண்டி பிரதேச விலங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு நிதியிடுவதற்கான கொடுகடன் திட்டம் .. | 5.60 | — | 5.60 | 10.09.82 | 2 |
| 4. அநுராதபுர மாவட்டத்தில், கிராம எற்பு சுயவேலை வாய்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட செயற்றிட்டங்களுக்கு நிதியிடலுக்கான கொடுகடன் திட்டம் ... | 6.00 | — | 6.00 | 14.10.82 | 2 |
| மொத்தம் | 641.90 | 201.15 | 440.75 | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1. 1982இல் இல் ரூ. 330 இலட்சங்களால் ஒதுக்கு அதிகரிக்கப்பட்டது.
2. 1982இல் இல் ரூ. 25 இலட்சங்களால் ஒதுக்கு அதிகரிக்கப்பட்டது.
3. 1982இல் இல் ரூ. 40 இலட்சங்களால் ஒதுக்கு அதிகரிக்கப்பட்டது.

1982 காலப்பகுதியில் மத்திய வங்கி பல அளவீடுகளை நடத்தியது. பின்வரும் நான்கு வெளிக்கள அளவீடுகள் கிராமியக் கொடுகடன் திணைக்களத்தினால் நடத்தப்பட்டதுடன், முதலிரண்டின் மீதான அறிக்கைகள் நிறைவு செய்யப்பட்டு மீளாய்விற்குரிய காலப்பகுதியில் வழங்கப்பட்டன.

1. மொனராகலை மாவட்டத்தில் பாற்பண்ணை அபிவிருத்தியின் உள்ளார்ந்த ஆற்றல் மீதான ஆய்வு;

2. அநுராதபுரம் மாவட்டத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட நான்கு கிராமங்களின் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களின் மீதான அளவீடு;

3. ஒகிட்டுக்களின் பயிர்ச் செய்கைக்கான கடன்களின் பயன்பாடு மீதான அளவீடு;

4. களுத்துறை மாவட்டத்தில் வழங்கப்பட்ட கடற்றொழில் கடன்களின் மீதான அளவீடுகள்

## அளவீடுகள்

1981 / 82 ஆம் ஆண்டிற்கான நுகர்வோர் நிதி சமூக பொருளாதர அளவீட்டுக்கள வேலைகள் முற்றுப்பெற்று தரவுகள் தொகுக்கும் வேலை தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவ்வளவீட்டின் முதற் சுற்று வட்டத்தில் ஒன்று சேர்க்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அபிவிருத்திச் செயலாளர்கள் குழுவின் வேண்டுகோளின்படி கிராமியக் குடியிருப்பாளர் நிதிகள் மீது அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டிற்காகத் திட்டமிடப்பட்ட முதலீட்டு அளவீட்டு அறிக்கை நிறைவு செய்யப்பட்டது. இவ்வாண்டுக் காலத்தில் நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள் முதன்மை வேளாண்மை உற்பத்திகளின் உற்பத்தியாளர் விலைகள், வேளாண்மைக்கான இறக்குமதிகளின் சில்லறை விலைகள், கிராமியத் துறையில் கூலி வீதங்கள் ஆகியன நாடுதழுவிய தரவுச் சேகரிப்பு முறையின்கீழ் சேகரிக்கப்பட்டன. அவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகள் ''விலைகள் கூலிகள் புள்ளி விபரவியல்'' என்ற ஆண்டு வெளியீட்டில் தரப்பட்டுள்ளன. இறக்குமதிகளுக்காகத் திறக்கப்பட்ட கொடுகடன் பத்திரங்கள் மீதான மாதாந்தத் தரவுகளைப் பெறுவதன் மூலம் இறக்குமதி தாராளமாக்கல் மீது மேற்பார்வையை தொடர்ந்தும் வங்கி மேற்கொண்டது.

## கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி

கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி வர்த்தக வங்கிகள், ஏனைய நிதி நிறுவனங்களிலிருந்தான முகாமை ஆளணியினருக்காக இருபத்தியாறு பயிற்சி நெறிகளையும், ஆய்வரங்குகளையும் தொழிற் கூடங்களையும் ஒழுங்கு செய்து நடத்தியது. இவற்றில் சில வர்த்தக வங்கிகளினாலும் நிதி நிறுவனங்களினாலும் இணைந்து ஆதரவளிக்கப்பட்டன. பாடங்கள் கொடுகடன் முகாமை, செயற்றிட்டங்களை அடையாளங்கண்டு மதிப்பிடல் வர்த்தக வங்கித் தொழில்

வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள், ஏற்றுமதிக் கொடுகடன் நிதியிடல், வங்கியாளருக்கான கணக்கியல், கூட்டு நிலையங்களின் சட்டமும் முகாமையும் ஆகியவற்றை உள்ளடக்கியனவாக இருந்தன. கிராமிய வங்கித் தொழிலும் கொடுகடனும் பயிற்சிக்கான முன்னுரிமை பெற்ற துறைகளாகக் கருதப் பட்டன.

கல்லூரி அதன் முதலாவது ஆண்டுத் தொழிற்பாடுகளை 1982 செத்தெம்பரில் நிறைவு செய்தது. ''இலங்கையின் கிராமிய பொருளாதார அபிவிருத்தியில் வங்கிகளின் பங்கு'' என்ற தலைப்பில் கல்லூரியின் முதலாவது ஆண்டுதின விரிவுரை ஆளுநரால் ஆற்றப்பட்டது.

## வாடிக்கையாளர் பணி

இவ்வாண்டுக்காலத்தில் வாடிக்கையாளர் பணிகளை முன்னேற்றும் விடயத்தில் மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுடன் சேர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டது. மத்திய வங்கி, நிதி திட்டமிடல் அமைச்சு, கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வர்த்தக வங்கி அமைப்பு ஆகியவற்றினை உள்ளடக்கிய ஒரு குழு ஆண்டு முழுவதும் தொடர்ந்தும் தொழிற் பட்டது. வாடிக்கையாளர்களுக்கு அனுப்பப்படவிருக்கும் வினக்கொத்தை அடிப்படையாகக்கொண்ட வர்த்தக வங்கிகளினால் அவர்களது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளின் தன்மைபற்றிய அளவீடொன்று இவ்வாண்டில் வடிவமைக்கப்படுகின்ற செயற்பாட்டில் இருக்கின்றது.

## வெளியீடுகள்

நாணய விதிச்சட்டத்தின் 35ஆம் பிரிவின் நியதிகளின்படி மாண்புமிகு நிதி திட்டமிடல் அமைச்சருக்கு கையளிக்கப்படும் மத்திய வங்கியின் ஆண்டறிக்கை' பொருளாதார மீளாய்வு, மாதாந்தச் செய்தித்திரட்டு ஆகியன இவ்வாண்டுக்காலத் தில் வெளியிடப்பட்டன.

அலுவலர் ஆய்வு மலர் XI இதழ் 1இனதும் 2இனதும் அச்சிடல் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன: அத்துடன் சமூக பொருளாதார தரவு ஏடு - 1982, இலங்கையின் பொருளாதார சமூக குறிக்காட்டிகள் — மலர் 4 இதழ் 1, விலைகள் கூலிகள் புள்ளிவிபரவியல் — 1981 ஆகியனவும் வெளியிடப்பட்டன.

வங்கியின் செய்தி ஆய்வு வெளியீடு தொடர்ந்தும் பிரபல்யம் அடைந்து வந்த துடன் இதே துறையில் ஒரு சிங்கள வெளியீட்டிற்கு முனைப்பான கேள்வி காணப் பட்டதால் 1982 ஓகத்தில் ''சற்றகன'' என்னும் பெயருடைய சிங்கள சஞ்சிகை யொன்று தொடக்கப்பட்டது. இவ்வாண்டுக்காலத்தில் வங்கி இரண்டு ''சிறப்பிதழ் களையும்'' வெளியிட்டது. பாற்பண்ணை தொடர்பானகொடுகடன் செய்தித்திரட்டு இதழ் 2 என்ற வெளியீடு 1982 செத்தெம்பரில் வெளியிடப்பட்டது.

## பிரதேச அலுவலகம் — மாத்தறை

மீளாய்வின் கீழான ஆண்டுக் காலப்பகுதியில் மத்திய வங்கியின் மாத்தறைப் பிரதேச அலுவலகம் முன்னோடிச் செயற்றிடங்களாக தொடக்க ஆண்டான 1981 காலப்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட கிராமியக் கொடுகடனையும், அபி விருத்தி நடவடிக்கைகளையும் விரிவாக்கியது. மாத்தறைப் பிரதேச அலுவலகம் மாத்தறை, அம்பாந்தோட்டை, மொனராகலை ஆகிய நிர்வாக மாவட்டங்களின் கிராமிய வங்கித் தொழிலையும், பிரதேச அபிவிருத்தி நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வையிடுகின்றது. கிராமிய அபிவிருத்தி வங்கித் தொழிலின் புதிய அமைப்பிற்கு முன்னோடியாக அறிமுகப்படுத்தப்பட்ட இரு மீள் நிதியிடல் கொடு கடன் திட்டங்களின் மீதான வேலை இவ்வாண்டுக் காலப்பகுதியில் தொடர்ந்தும் நடைபெற்றது. இவை மாத்தறை மாவட்டத்திலுள்ள இளைஞர்களுக்கான சுய தொழில் மீள் நிதியிடல் கொடுகடன் திட்டமும் (சுதொதி) கிராம கையேற்றல் மீள் நிதியிடல் கொடுகடன் திட்டமுமாகும். சுய தொழில் மீள் நிதியிடல் கொடு கடன் திட்டம் சிறிதளவான தனியார் செயற்றிட்டங்களுக்கான வர்த்தக வங் கிக் கடன் வழங்கலை பலப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட வேளையில் இரு திட்டங்களும் பொதுவாக கிராம கையேற்பு மீள் நிதியிடல் கொடுகடன் திட் டம் (கிகைதி) ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி வங்கித் தொழில் கோட் பாட்டினை உருவாக்கியது. கிராம கையேற்பு மீள் நிதியிடல் கொடுகடன் திட்டச் செயற்பாடுகள் வங்கி உதவியுடன் தெரிந்தெடுக்கப்பட்ட கிராமங்களின் மொத்த அபிவிருத்திக்கான தொகையாக வேலை செய்தல், ஒன்று சேர்ந்த திறமை, பலவகை முகவர் அணுகுமுறை ஆகியவற்றின் அதிகரிப்புக்கு ஊக்குவித்தது. இத் திட்டத்தின் கீழ் உட அப்பறேக்காவும், நடம்பொலவும் முன்னோடிச் செயற்றிட் டங்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டன.

உள்நாட்டு மூலவளங்களின் பயன்பாட்டையும் அபிவிருத்தியையும் வழிப்படுத் தக்கூடிய சுய தொழில் வழிமுறைகளினூடாக தங்கள் வருவாய்களை அதிகரிக்க விரும்புவோருக்கும் பிரதேச அலுவலகம் பலவித உதவிப் பணிகளை வழங்குகின் றது. வேளாண்மை, கைத்தொழில் பணிகள் துறைகளில் பொருளாதார ஆற்றல் மிக்க செயற்றிட்டங்களை அறிந்திருத்தலை அதிகரிப்பதற்காக பயிற்சிச் செயற் றிட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. மேலே கூறப்பட்ட கொடுகடன் திட்டங்களின் கீழ் பங்குபற்ற விரும்புபவர்கள் செயற்றிட்டத்திற்கான வங்கி உதவி யைப் பயன்படுத்த விரும்புமிடத்து வியாபாரத்தில் வெற்றி பெறுவதற்கான அடிப் படைத் தேவைகளை மதிப்பிடுவதற்கு தெரிவுசெய்யப்பட்ட பொருளாதார நட வடிக்கைகளில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டனர். வங்கியின் உதவியுடன் முறைசார்ந்த பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான இயக்கத் தில் 3000 இற்கும் அதிகமானோர் பங்குபற்றினர்.

இதேபோல இவ்வாண்டுக் காலப்பகுதியில் வங்கி முகாமையாளர்களை சிறிய அளவிலான கிராமியச் செயற்றிட்டக் கடன் வழங்கலில் அறிமுகப்படுத்துவதற் காக பல கருத்தரங்குகளும் வேலைத்தளப் பயிற்சிகளும் நடாத்தப்பட்டன. மக ளிர் பணியகம், வேளாண்மைத் திணைக்களம், விலங்கு உற்பத்தி நலத்துறைத் திணைக்களம், கிராமிய அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை வங்கி, மாத்தறை அரசாங்க அதிபரின் அலுவலகம் போன்ற முகவர் நிலையங்களில் பலவகைப் பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் பிரதேச அலுவலகம் தீவிர ஆர்வத்துடன் உதவியளித்தது.

வங்கிக் கடன் வழங்கலுக்கு ஏதுவான செயற்றிட்டங்களை இனங்காண்பதற் காக தயார்படுத்தும் நிலையப் பயிற்சி நடவடிக்கைகள் உருவாக்குகின்றன.

1982 இறுதியில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, புதிதாகத் திறக்கப்பட்ட இந்தியன் ஓவசீஸ் வங்கி ஆகியவற்றிற்கு சுயதொழில் மீள் நிதியிடல் கொடு கடன் திட்டத்தின் கீழ் 343 செயற்றிட்டங்கள் நிதியிடுவதற்கும் கிராமியக் கையேற்பு மீள் நிதியிடல் கொடுகடன் திட்டத்தின்கீழ் 28 செயற்றிட்டங்களை நிதியிடுவதற்கும் பிரதேச அலுவலகம் விதந்துரைத்தது. இவ்விரு திட்டங்களின் கீழும் விதந்துரைக்கப்பட்ட கடன்களின் மொத்தம் முறையே ரூ. 1,345,730, ரூ. 90,136 ஆகும். விதந்துரைக்கப்பட்ட மொத்தக் கடன்களில் ஏறத்தாழ 80 சதவீதம் கைத்தொழிலுக்கும் ஏனைய பண்ணையல்லாத் துறைக்குமாக விளங்கிய வேளையில் ஏறத்தாள 20 சத வீதம் வேளாண்மைக்கானதாக இருந்ததைக் கவ னிக்க முடிந்தது.

இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும் சுயதொழில் மீள் நிதியிடல் கொடு கடன் திட்டத்தின் கீழ் 191 கடன்களுக்கும் கிராமக் கையேற்றல் மீள் நிதியிடல் கொடுகடன் திட்டத்தின்கீழ் 13 கடன்களுக்கும் 1982 திசெம்பர் இறுதியளவில் ஒப்புதல் வழங்கின. இவ்விரு திட்டங்களின் கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட கடன் களின் மொத்தத் தொகை முறையே ரூ. 764,905 ஆகவும் ரூ. 35,026 ஆகவும் விளங்கின.

அட்டவணை 2.9 இல் காட்டப்பட்டவாறு இவ்விரு திட்டங்களின் கீழும் வங்கி களால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் வேறுபட்ட நோக்கங்களுக்கானதாக இருந்தன.

அட்டவணை 2.9

**சுயதொழில் வாய்ப்பு, கிராம ஏற்பு ஆகிய திட்டங்களின் கீழ் வர்த்தக வங்கிகளால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் பொருளாதாரப் பயன்கள் 1982 இறுதியில் உள்ளவாறு**

| துறை | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு[1] ரூபா | வங்கி உதவுதொகை (கடன் தொகை) ரூபா | மதிப்பிடப்பட்ட தொழிற்பட்ட மூலதனம் ரூபா | மதிப்பிடப்பட்ட ஆண்டு மொத்த வருமானம்[2] ரூபா | மதிப்பிடப்பட்ட மொத்த இலாபம்[3] ரூபா | மதிப்பிடப்பட்ட தொழில் வாய்ப்பு[4] |
|---|---|---|---|---|---|---|---|
| 1. வேளாண்மை .. | 4 | 26,230 | 13,785 | 14,760 | 21,850 | 10,472 | 7 |
| 2. பாற்பண்ணை ... | 8 | 48,946 | 37,500 | 2,356 | 61,700 | 49,913 | 8 |
| 3. கோழிப்பண்ணை .. | 19 | 147,590 | 93,700 | 108,977 | 281,675 | 101,070 | 19 |
| 4. ஆட்டுப்பண்ணை ... | — | — | — | — | — | — | — |
| 5. கடற்றொழில் ... | 2 | 9,900 | 6,000 | 9,000 | 12,000 | 14,400 | 2 |
| 6. அப்பமனையும், மிட்டாய்த் தொழிற்சாலையும் ... | 12 | 82,436 | 47,840 | 43,119 | 329,516 | 52,801 | 23 |
| 7. ஏனைய உணவு உற்பத்திகள் ... | — | — | — | — | — | — | — |
| 8. புகையிலை, பீடி .. | 3 | 40,205 | 16,200 | 35,120 | 146,740 | 62,220 | 10 |
| 9. கைத்தறி நெசவு ... | 9 | 80,217 | 30,550 | 33,468 | 139,079 | 35,066 | 22 |
| 10. தையல் .. | 27 | 235,120 | 109,115 | 103,665 | 442,988 | 97,128 | 50 |
| 11. ஏனைய புடவை உற்பத்திகள் ... | 7 | 60,070 | 25,970 | 22,467 | 146,605 | 35,857 | 18 |
| 12. தச்சுத்தொழில் .. | 7 | 42,308 | 26,820 | 25,165 | 144,575 | 27,810 | 12 |
| 13. தாள் உற்பத்திகள் ... | 2 | 11,040 | 9,490 | 7,640 | 57,000 | 14,880 | 4 |
| 14. உலோகமல்லாக் கைத்தொழில்கள் | 45 | 300,091 | 178,825 | 191,177 | 671,925 | 226,371 | 135 |
| 15. கல்லுடைத்தல் ... | 6 | 40,174 | 23,250 | 16,109 | 85,300 | 35,088 | 16 |
| 16. உலோக உற்பத்திகள் .. | 5 | 56,420 | 22,200 | 17,787 | 127,200 | 24,351 | 18 |
| 17. கயிற்று உற்பத்திகள் .. | 22 | 83,908 | 51,435 | 59,437 | 219,950 | 71,290 | 22 |
| 18. திருத்தலும் பேணலும் .. | 11 | 64,397 | 44,795 | 40,815 | 127,306 | 43,195 | 17 |
| 19. ஏனையவை ... | 15 | 159,607 | 62,450 | 67,731 | 345,580 | 105,248 | 25 |
| மொத்தம் ... | 204 | 1488,659 | 799,925 | 798,793 | 3360,989 | 1007,160 | 408 |

1. விண்ணப்பதாரர்களால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக்கொண்டு வங்கி அலுவலகங்களால் மதிப்பிடப்பட்டது.
2. 50 சதவீத பயன்பாட்டு இயலளவில்
3. மதிப்பிடப்பட்ட மொத்த வருமானம் (மதிப்பிடப்பட்ட உற்பத்திச் செலவு, வட்டி, கடன்மீள் கொடுப்பனவுகள்)
4. பகுதிநேரத் தொழிலாளர்களையும் உள்ளடக்குகின்றது.

பொதுவாக கடன் திட்டம் ஒவ்வொன்றும் ஏறத்தாழ ரூ. 6,000 மட்டுமே செலவுள்ள சிறு துறைச் செயற்றிட்டங்களுக்கான நோக்கத்தைக் கொண்டிருப்பதனால் செயற்றிட்டத்திற்கான சராசரிச் செலவு முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டுள்ளது. வங்கிகள் 204 செயற்றிட்டங்களுக்கான ரூ. 799,925ஐ அனுமதித்துள்ளதுடன் இச்செயற்றிட்டங்களில் வங்கிகளின் பங்களிப்பு தொழிற்படும் மூலதனத் தேவைகளை நிதியிடுதலையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. இத்திட்டங்களின் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த மதிப்பிடப்பட்ட மொத்த ஆண்டு வருவாய் ரூ. 3,360,989 ஆக விளங்கி முதலீடு செய்யப்பட்ட வங்கிக் கடன்களை போல ஏறத்தாழ நான்கு மடங்கு வருவாய்களை இச்செயற்றிட்டங்கள் உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உற்பத்திச் செலவு, வட்டி, கடன் மீள் கொடுப்பனவுகள் ஆகியவற்றைக் கழித்து மொத்த மிகை ஏறத்தாழ வருவாயின் 30 சத வீதமாகும்.

1982 இறுதியில் வங்கிக் கொடுகடனுக அனுமதித்த மொத்தத் தொகை ரூ. 530,064 பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ கடன் பெற்ற 150 பேர் கடன் மீள் கொடுப்பனவுகளைத் தொடங்கிவிட்டனர். உண்மையான மொத்த மீள்கொடுப்பனவுகள் திட்டமிடப்பட்ட மொத்த மீள் கொடுப்பனவுகளில் 82 சத வீதமாக விளங்கின.

பிரதேச அலவலகம், அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள பிரதேசத்தின் வருவாயையும் தொழிலையும் அபிவிருத்தி செய்வதற்காக வங்கி மூலவளங்களை நெறிப்படுத்துவதை நோக்காகக் கொண்ட பல பிரதேச கிராமிய அபிவிருத்தி நிதியிடல் நடவடிக்கைகளை வகுப்பதிலும் நிறைவேற்றுவதிலும்கூட உதவி வழங்கின.

மொனராகலை மாவட்டத்திற்காக பாற்பண்ணை அபிவிருத்தி மீள் நிதியிடல் கடன் திட்டமொன்றிற்கு மத்திய வங்கியினுல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பாற்பண்ணை அபிவிருத்திக்கு முன் நிபந்தனையான சந்தையிடல் ஏற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக பாற்சபை மொனராகலை விலங்கு மருத்துவ அலுவலகம் ஆகியவற்றுடன் இணைந்து சிராமமட்ட பால் சேகரிப்புத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

பிரதேச தீர்ப்பனவு நிலையம் தொடர்ந்தும் தொழிற்பட்டு இரு நாளாந்தத் தீர்ப்பனவுகள் நடைபெறுவதுடன் இப்பகுதியிலுள்ள வர்த்தக வங்கிளான மக்கள் வங்கி, இலங்கைவங்கி, வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி, இந்தியன் ஓவசீஸ் வங்கி ஆகியன இதில் பங்கு கொள்ளுகின்றன.

## பிரதேச அலுவலகம் — அநுராதபுரம்

மத்திய வங்கியின் இரண்டாவது பிரதேச அலுவலகம் அநுராதபுரத்தில் 1982 மாச்சு 20ஆம் நாளில் அதன் தொழிற்பாடுகளைத் தொடங்கியது. தொழிற்பாட்டிற்கு உட்பட்ட பகுதி தற்போது அநுராதபுர நிர்வாக மாவட்டமாகும்.

பிரதேச அலுவலகத்தை நிறுவுவதற்கான முக்கிய நோக்கங்களில் ஒன்று அபிவிருத்திக்கடன் வழங்கல் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கிராமியத் துறையின் வங்கித்தொழில் தேவைகளை கூடிய விளக்கமுள்ளதாகவும், உறுதியானதாகவும் வழங்குவதற்கு வர்த்தக வங்கிகளை கிராமிய பகுதிகளுக்குள் ஆழமாக ஊடுருவுவதை ஆராயத்தூண்டுவதாகும். இந்நோக்கத்தை அடைவதற்கு பிரதேச அலுவலகம் ஒரு புறத்தில் அபிவிருத்தி வாய்ப்பினை இனம் காண்பது, அபிவிருத்திக் கடன் வழங்கல் பிரச்சினைகள், தீர்வுகளை காண்பதும் தேவையான உதவியையும் வழிமுறையையும் வங்கித்தொழில் துறைக்கு வழங்கல் ஆகியன மூலமும் மறுபுறத்தில் வங்கித்தொழிற்றுறை பற்றிய கிராம மக்கள் மத்தியிலுள்ள தற்போதைய தவறுன எண்ணங்களை மாற்றுவதற்கு முயற்சி செய்வதும் அதன் மூலம் திருப்தியற்ற வங்கித்தொழில் நடைமுறைகளையும் பழக்கங்களையும் அவர்

களுடன் தொடர்ந்து பேசி நீக்குவதன் மூலமும் பொருத்தமான சூழ்நிலையொன்றை உருவாக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கிராமிய துறையின் அபிவிருத்திக்கான திடமான வங்கித்தொழில் அமைப்பை ஏற்படுத்தும் வங்கியாளருக்கும் கிராம மக்களுக்கும் இடையிலான எப்போதும் அகன்று செல்லும் இடைவெளியை ஒடுக்குவதற்கு இந்நடவடிக்கை வழிவகுக்குமென உணரப்பட்டது.

இந்நோக்கத்தினை அடைவதற்கு கிராமிய துறையிலுள்ள சுயதொழில் செயற்றிட்டங்களுடன் தெரிவு செய்யப்பட்ட ஆட்களுக்கு அபிவிருத்திக் கடன் வழங்கும் கொள்கையில் வர்த்தக வங்கிகளினூடாக புதியதோர் நிதியிடல் உதவி வழங்கும் முன்னோடிச் செயற்றிட்டமொன்று தொடங்கப்பட்டது. எனினும் இத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறே உடனடி விளைவு, புதிய தொழில்வாய்ப்புக்களையும் வருவாய் வழிமுறைகள் ஆகியவற்றை உருவாக்குதலும், இத்துறையில் உற்பத்தியை அதிகரித்தலுமே ஆகும். தொடக்கத்தில் இத்திட்டம் நுவறகம பலாத்த கிழக்கு, மத்தி, மேற்கு, தெற்கு திறப்பண்ணை, மிகுந்தலை என்ற ஆறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளையும் மேலுள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளின் கீழ்வரும் சில தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டது.

இத்திட்டம் இவ்வாறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நடத்தப்பட்ட கருத்தரங்குகளினதும் கூட்டங்களினதும் தொடரொன்றிற்கு பொதுமக்கள், அரச முகவர் நிலையங்கள், வங்கியாளர், ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டோர் ஆகியவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

பிரதேச அலுவலகம் ஆண்டின் மூன்றும் காலாண்டுவரையும் நடாத்திய தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் கூட்டங்கள் களங்களுக்கு செல்லுதல் போன்றவற்றினூடாக மிகவும் கூடிய எண்ணிக்கையில் பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து தொடக்கத்தில் 293செயற்றிட்ட எடுத்துரைப்புக்களை நிதியிடுவதற்கு கவனத்தில் எடுப்பதற்காக இனம் கண்டது. இனம் காணப்பட்ட அனைவருக்கும் திணைக்களங்கள், முகவர் நிலையங்கள் ஆகியவற்றின் உதவியுடன் பயிற்சி வசதிகள் அளிக்கப்பட்டன. ஆண்டின் கடைசிக்காலாண்டிலும் தொழிற்படு அறிவுறுத்தல்கள் எண். ஆர்சிடி/8/1982 1982 ஒற்றோபர் 14இல் வழங்கிய பின்பும் 101 செயற்றிட்டங்கள் நிதியிடப்படுவதற்கு அனுப்பப்பட்டுள்ளன. இத் திட்டத்தின்கீழ் கடன் பெறுபவர் அவரது பங்களிப்பாக மொத்த செயற்றிட்டச் செலவில் 10 சதவீதத்தை செலுத்த எதிர்பார்க்கப்படுவதோடு பொறுப்பேற்கப்பட்ட செயற்றிட்டத்தின் பண்புகளையும், இயல்புகளையும் கொண்டு கடனின் அளவு தீர்மானிக்கப்படுகிறது. வேளாண்மைச் செயற்றிட்டங்களைப் பொறுத்தமட்டில் கடன் பெறுபவர் குழாய்க்கிணறு, காற்றில் இயங்கும் ஆலை, இறைக்கும் பொறியுடன் திறந்த அகழப்பட்ட கிணறுகள் என்பவற்றுக்கு முறையே ஆகக்கூடிய ரூ. 40,500/- ரூ. 15,250/- ரூ. 12,000/- வரையில் வசதிகளைப் பெறலாம். ஆகக்கூடிய ரூ. 10,000/- வரைக்கும் கால்நடை அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், சிறு

கைத்தொழில்கள், இன்றியமையாத பணிகள் ஆகியவற்றிற்கு நிதியைப் பெறக் கூடியதாகவுள்ளது. செயற்றிட்ட நிதியிடலுக்கு மேலாக புகையிலை, வாழைப் பயிர்ச்செய்கைகளுக்கும் வசதிகள் கிடைக்கின்றன.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள் மீது மத்திய வங்கி 100 சதவீத மீள் நிதியிடும் வசதிகளை வர்த்தக வங்கிகளுக்கு ஆண்டொன்றுக்கு $8\frac{1}{2}$ சதவீதத்தில் வழங்குகிறது. அத்துடன் பெறுபவரிடமிருந்து ஆண்டுக்கு $12\frac{1}{2}$ சதவீதத்தில் சலுகை வட்டிவீதத்தில் அறவிடப்படுகிறது. கடன் பெறுபவர் செயற்றிட்டத்தின் வகையைப் பொறுத்து நீண்ட மீள்கொடுப்பனவுகள் காலத்தையும் அனுபவிக்கிறார்.

1982 திசெம்பர் இறுதியில் 10 செயற்றிட்டங்கள் வங்கிகளால் ரூ. 52,850 இதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஏனைய 10 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் மிகிரிகம, முடிதாகம, சுச்சரித்தகம நவொடகம ஆகிய மாதிரிக் கிராமங்களில் தொழிலற்ற சிலரைச் சுய தொழில் செயற்றிட்டங்களில் ஈடுபடுத்துவதற்காக நான்கு அளவைகள் இக்கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டன.

பிரதேச அலுவலகம் தீர்ப்பனவு நிலையமொன்றை நிறுவி காசோலைகளின் தீர்ப்பனவை விரைவுபடுத்துவதற்கு உதவுவதற்கு இரு தீர்ப்பனவுகள் நடைபெறுகின்றன. இதில் பங்குபற்றும் வங்கிகளாவன மக்கள் வங்கி, இலங்கை வங்கி, அட்டன் நெசனல், இந்திய அரச வங்கி என்பனவாகும்.

## செலாவணிக் கட்டுப்பாடு

செலாவணிக்கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்துவதில் அரசின் முகவராக வங்கி தொடர்ந்தும் தொழிற்பட்டது. இவ்வாண்டுக்காலத்தில் நடைமுறைக்கு வந்த செலாவணிக்கட்டுப்பாட்டு நடைமுறைகளின் முக்கிய மாற்றங்கள் கீழே எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

1. ஏற்றுமதிகள்

(i) 1982 பெப்புருவரி 18ஆம் திகதி தொடக்கம் பன்னாட்டுகோப்பி அமைப்பின் உறுப்புரிமை நாடுகளுக்கான கோப்பி ஏற்றுமதி தடை செய்யப்பட்டது. எனினும் 1982 ஒற்றோபர் 26ஆம் திகதி தொடக்கம் கோப்பி ஏற்றுமதிமீது விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதுடன் இத்தகைய ஏற்றுமதிகள் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் முன் அனுமதியுடன் செய்யப்படவேண்டியிருந்தது.

(ii) 1982 நவெம்பர் 10 ஆம் திகதி தொடக்கம், தெங்கு உற்பத்திகளை (உள்ளீட்டு உற்பத்திகள்) ஏற்றுமதிசெய்ய, தெங்கு அபிவிருத்தி வேளாண்மைச் சபையிடமிருந்து சான்றிதழ் பெறும் வழக்கம் நீக்கப்பட்டது.

**2. இறக்குமதிகள்**

(i) செலாவணியை உபயோகப்படுத்தும் இறக்குமதிப் பத்திரங்களின் கீழான உந்து ஊர்திகளின் இறக்குமதிகட்கு, கொடுகடன் பத்திரங்களில் ஏற் படுத்தவேண்டுமென்றதேவை வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு கள் மூலம் அத்தகைய இறக்குமதிக்கான கொடுப்பனவு செய்யப்படு மிடத்து நீக்கப்பட்டது.

(ii) 1982 மாச்சு 18ஆம் திகதி தொடக்கம் செய்தித்தாள்கள் இறக்குமதிசெய் வதன் பொருட்டு கொடுகடன் பத்திரங்களை ஏற்றுக்கொள்வதற்காக இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளரால் வழங்கப்பட்ட ஓர் இறக் குமதி உரிமம் அவசியம் என்று பிரகடனப்படுத்தப்பட்டது.

(iii) 1982 மே 13 ஆம் திகதி தொடக்கம் இலங்கைக்குள் கோழி இறக்குமதி செய்வதற்கு, பேராதனை மிருக நல உற்பத்தித்திணைக்களப் பணிப்பாள ரால் ஜீ. வி. எஸ். 31 படிவத்தில் வழங்கப்பட்ட அனுமதி அவசியமாகும்.

(iv) மின்சார கம்பிகள் இறக்குமதி செய்வோர் தேசிய மெற்றிக் மாற்றல் மேலாண்மைச்சபையின் இலங்கைத்தரம் 40 (1981) க்கு இணங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

(v) சில கட்டுப்பாடுகட்கிணங்க தங்க நகைத் தயாரிப்பாளர்கட்கு, மீள ஏற்று மதி செய்வதற்கு நகைகள் தயாரிக்க தங்கம் இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

**3. உள்முக பணவனுப்பல்கள்**

(i) 1982 ஏப்பிரல் 12 ஆம் திகதி தொடக்கம் தனிப்பட்டோருக்கோ அல்லது கூட்டு நிலைய கணக்குகட்கோ வரும் ஐ. அ. டொலர் 50,000 அல்லது அதற்கு மேற்பட்ட உள்முகப் பணவனுப்பல்களை வரவு வைப்பதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதி தேவையென பிரகடனப் படுத்தப்பட்டது.

(ii) 1982 யூன் 28 ஆம் நாள் தொடக்கம் கொழும்பு பெரும்பாகப் பொருளா தார ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சியாளர் களால் பெறப்பட்ட ஐ. அ. டொலர்கள் 50,000 அல்லது அதற்கு மேற் பட்ட உள்முகப் பணவனுப்பல்களை இலங்கை ரூபாவிற்கு மாற்றுவதற் கான செலாவணிக்கட்டுப்பாட்டாளரின் அனுமதி தள்ளுபடி செய்யப் பட்டது.

**4. பயணத்தர் காசோலைகள் வழங்கல்**

வழங்கப்படும் எல்லா பயணத்தர் காசோலைகளிலும் ''இலங்கையில் வழங்கப் பட்டது'' என்று குறிப்பிடும்படி அதிகாரம் பெற்ற வர்த்தகர்களும், பயண முக

வர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டனர். (வெளிநாட்டு நாயணக் கணக்குளில் உள்ள நிதிகட்கும், வெளிநாட்டுச் செலாவணி மாற்றல்கட்குமெதிராக அதிகாரம்பெற்ற வர்த்தகர்களால் வழங்கப்படுவன தவிர்ந்த)

5, வர்த்தக வங்கிகட்கு வழங்கப்பட்ட செலாவணிக்கட்டுப்பாட்டுத் தொழிற்பாட்டு அதிகாரங்கள்

(i) 1982 பெப்புருவரி 11 ஆம் திகதி தொடக்கம் எல்லா தெங்கு உற்பத்திகளினதும் ஒப்பந்த விலையில் 5 சதவீதம், ஏற்றுமதியாளர்களால் முகவர் தரகாக்ச் செலுத்தப்பட அனுமதி வழங்கப்பட்டது.

(ii) வதிவல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கினை வைத்திருப்போருக்கு அவர்களுடைய கணக்கில் உள்ள பணத்திற்கு எதிராக வெளிநாட்டுப் பயணத்துக்காகவோ தீர்வையற்ற கடைகளில் கொள்வனவு செய்வதற்காகவோ பயணத்தர் காசோலைகளை வழங்குதல்.

(iii) பின்வருவனவற்றிற்கெதிராக விண்ணப்பதாரர்களின் விருப்பத்துக்கிணங்க ஐ. அ. டொலர்கள் அல்லது ஏனைய வெளிநாட்டு நாணயங்களில் பயணத்தர் காசோலைகளை வழங்குதல் —

அ. மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தாள்கள், பயணத்தர் காசோலைகள், வரைவுகள், காசோலைகள், இலங்கை ரூபாவில் எழுதப்பட்ட வெளிநாட்டு வரைவுகளும் சமர்ப்பிக்கப்படும் வெளிநாட்டு நாணயங்கள் சுங்கப்பகுதியினருக்கு வெளியிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியாக இருத்தல் வேண்டும்.

ஆ. விண்ணப்பதாரரால் ஏற்கனவே நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட வர்த்தகர் ஒருவரிடம் மாற்றப்பட்ட வெளிநாட்டு நாணயம் சுங்க வெளிப்படுத்தல் அட்டையுடன்

இ. விண்ணப்பம் செய்யப்படும் திகதியில் இருந்து ஆறுமாத காலப்பகுதிக்குள் விண்ணப்பதாரின் பெயருக்கு மட்டும் பெறப்பட்ட உள்நோக்கிய பண அனுப்பல்கள்

(iv) பயணத் தேவைகட்காக வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து பயணச் சீட்டு காண்பிக்கப்படுமிடத்து கொண்டுசெல்லும் தொகையில் 20 சதவீத அளவிற்கு வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

## பொதுப்படுகடன்

நாணய விதிச் சட்டத்தின் 113 ஆம் பிரிவின் நியதிகளின்படி அரசின் சார்பில் பொதுப்படுகடனை மத்திய வங்கி தொடர்ந்தும் முகாமைப்படுத்தியது. முக்கிய தொழிற்பாடுகள் ரூபாக் கடன்களை மிதக்கவிடல், வெளிநாட்டுக் கடன் பகிர்ந்தளிப்புக்களைப் பதிவுசெய்தல், உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்

தல், வட்டி, கடப்பாட்டுக் கட்டணங்களின் கொடுப்பனவு ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. 1982 ஆம் ஆண்டில் 1981 இன் எண் 77 கொண்ட ஒதுக்கு விதியின் நியதிகளின்படி ரூ. 60,000 இலட்சம் கொண்ட ரூபாக் கடன்கள் மிதக்கவிடப்பட்டன. இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்களின் வழங்கல், வெளிநிற்கும் உண்டியல்களின் தொகையை ரூ. 34,000 இலட்சத்தால் அதிகரித்தன. இவ்வாண்டில் இணைந்த முதலீட்டு நிதியம், வரி ஒதுக்குச் சான்றிதழ்கள், வெளிநாட்டு நிருவாகக் கடன்பாடுகள், வெளிநாட்டுப் படுகடன் ஆகியவற்றை பொதுப் படுகடன் திணைக்களக் கண்காணிப்பாளர் முகாமைப்படுத்துவதும் தொடர்ந்திருந்தது. 1982 இல் மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 50,860 இலட்சங்களாக இருந்தன. கடன்கரைப்பு நிதியங்களுக்கான உதவுதொகைகளை உள்ளடக்கிய கடன்களின் மொத்த மீள் செலுத்துகைகள் (கடன் தீர்ப்பனவுகளுக்கான வழங்கு தொகையும் உட்பட) ரூ. 26,110 இலட்சங்களாக விளங்கின.

அத்துடன் பொதுப்படுகடன் கண்காணிப்பாளர், நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை, அரச ஈட்டு முதலீட்டு வங்கி ஆகியவற்றின் சார்பில் தொகுதிக் கடன்களையும் மிதக்கவிட்டார்.

**ஊழியர் சேம நிதியம்[1]**

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது ஊழியர் சேமநிதியத் திணைக்களத்தினூடாக 1958 ஆம் ஆண்டில் ஊழியர் சேமநிதியச் சட்ட விதி எண் 15 இன் பிரிவு 5 இன் நியதிகளுக்கிணங்க செலுத்தப்படும் எல்லாத் தொகைகளையும், உதவுதொகைகளாகவும் மேலதிகக்கட்டணங்களாகவும் இந்நிதியிலிருந்து முதலீடு செய்யப்படும் பணத்திலிருந்து பெறும் வருமானம் அதன் சார்பான ஏனைய தொழிற்பாடுகள் என்பதின் மூலம் பெறுகின்றது. 1982 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் அதன் நடவடிக்கைகள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன.

**உதவுதொகைகள்**

1982 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந் நிதியத்தினுல் பெறப்பட்ட உதவு தொகைகள் 1981 ஆம் ஆண்டின் ரூ. 8,956.8 இலட்சங்களுக்கெதிராக ரூ. 10,795 8 இலட்சங்களாக விளங்கியது. இது முன்னைய ஆண்டுக்கான உதவு தொகை மட்டத்தினைவிட ரூ. 1,839.0 இலட்சம் அல்லது 20.53 சதவீதத்தினுல் அதிகரித்துள்ளமையைப் பிரதிபலிக்கின்றது.

1982 ஆம் ஆண்டு இறுதியின்படி கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவிற்குள் இயங்கும் 57 கைத்தொழில்கள் ஊ. சே. நி. சட்டத்தின் கீழ் பதிவு செய்து தங்கள் ஊழியர்கட்கு உதவு தொகையினைச் செலுத்தலாயினர். இம்மூலத்திலிருந்து 1982 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பெறப்பட்ட உதவு தொகைகள் ரூ. 250 இலட்சமாகும்.

---

1. தற்காலிகத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.

### உறுப்பினர்களின் நிலுவைகள்

ஆய்வுக்குரிய ஆண்டிற்கான வட்டிகள் வழங்கப்படுவதற்கு முன்னர் உறுப்பினர்களின் நிலுவைகள் 1982.12.31 இன்படி ரூ. 68,403.4 இலட்சங்களாக விளங்கி 1981 ஆம் ஆண்டுக்கான மட்டத்தைவிட ரூ. 12,437.9 இலட்சம் அல்லது 22.22 சத வீதத்தினுல் அதிகரித்தது.

### முதலீடுகள்

மீளாய்விற்குரிய ஆண்டில் இந்நிதியம் 1981 ஆம் ஆண்டின் ரூ. 11,239.7 இலட்சங்களுக்கு எதிராக ரூ. 14,777.2 இலட்சங்களை அரச பிணைகளிலும், திறைசேரி உண்டியல்களிலும் முதலீடு செய்தது. இது 1981 ஆம் ஆண்டின் மட்டத்தைவிட ரூ. 3,537.5 இலட்சங்கள் அல்லது 31.47 சத வீதங்கொண்ட அதிகரிப்பாகும். மீளாய்விற்குரிய ஆண்டின் மொத்த முதலீடானது முதிர்ச்சியடைந்த முன்னைய முதலீடுகள், திறைசேரி உண்டியல்கள் ஆகியவற்றின் ரூ. 1,088.5 இலட்சம்கொண்ட பெறுகைகளை உள்ளடக்கியிருந்தது. 1982 ஆம் ஆண்டில் இலங்கை அரசினுல் வழங்கப்பட்ட மொத்த பிணைகளில் 23.60 சத வீதத்தைப் பிரதிபலிக்கும் ரூ. 14,161.3 இலட்சங்கள் அரச பிணைகளில் முதலீடு செய்யப்பட்ட மொத்த தொகையாகும். 31.12.1982 இன்படி நிதியத்தினுல் முதலீடு செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ. 72,443.6 இலட்சங்களாக விளங்கியது.

### முதலீட்டிலிருந்தான வருமானம்

1982 இல் நிதியத்தின் முதலீடுகளிலிருந்தான வருமானம் 1981 ஆம் ஆண்டின் ரூ. 4,861.8 இலட்சங்களுக்கு எதிராக ரூ. 6,584.9 இலட்சங்களாக விளங்கியது. இந்த அதிகரிப்பானது முன்னைய ஆண்டினது அதிகரிப்பான ரூ. 1,345.7 இலட்சம் அல்லது 38.27 சத வீதத்திற்கு எதிராக ரூ. 1,723.1 இலட்சங்களாக அல்லது 35.44 சத வீதமாக விளங்கியது. மீளாய்விற்குரிய ஆண்டில் நிதியத்தினுல் பெறப்பட்ட அதிகரித்த அளவு உதவு தொகைகளின் முதலீடு, கடந்த முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாயின் மீள்முதலீடு என்பன இவ்வதிகரிப்பின் முக்கிய காரணிகளாகும்.

### மீளளிப்புக்கள்

1982 ஆம் ஆண்டில் உறுப்பினர்களுக்கு ஊழியர் சேம நிதிதியத்ன் மீளளிப்புக்கள் மூலம் வழங்கப்பட்ட மொத்தத் தொகை 1981 ஆம் ஆண்டின் ரூ. 3,003.6 இலட்சங்களுக்கு எதிராக ரூ. 3,726.4 இலட்சங்களாக விளங்கியது. 1981 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது ரூ. 722.8 இலட்சம் அல்லது 24.06 சத வீத அதிகரிப்பைக் கொண்டுள்ளது. 1982 ஆம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட மீளளிப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1981 ஆம் ஆண்டின் 61,969 இற்கு எதிராக 69,934 ஆக விளங்கியது. இது குடிபெயர்ந்து செல்லும் இந்தியக் குடிகளிட

மிருந்து பெற்ற 1981 ஆம் ஆண்டின் 24,630 கோரல்களுக்கு எதிராக 31,718 கோரல்களையும் உள்ளடக்கும். வைத்திய அத்தாட்சியின் கீழ் மீளளிப்பு செய்யப் பட்ட கோரல்களின் எண்ணிக்கை 22,222 ஆகும்.

**உறுப்பினர் நிலுவைகளின் மீதான வட்டி**

ஊழியர் சேம நிதியானது ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் நிதியத்தின் பண முதலீடுகளிலிருந்தான வருமானத்திலிருந்து உறுப்பினர்களின் நிலுவைகளுக்கு வட்டி கொடுப்பனவு செய்தல் வேண்டும். உறுப்பினர்களின் நிலுவைகளின் மீது வழங்கப்பட வேண்டிய வட்டி வீதம் 1981ஆம் ஆண்டில் ஆண்டிற்கு 8.5 சத வீதத்திலிருந்து 1981 ஆண்டில் 9.5 சத வீதத்திற்கு உயர்த்தப்பட்டது. ஆண்டின் இறுதியில் உறுப்பினர் வரவில் வெளிநிற்கும் நிலுவைகளின் மீது வட்டியும் அதன் பின்னர் கூட்டு மொத்தத்தில் வட்டி ஒன்றும் திரட்டப்படுகின்றது. இதனைவிட ஆண்டின் இறுதியில் உறுப்பினர், ஒருவரின் வரவில் வெளிநிற்கும் நிலுவை களின் பேரில் அந் நிலுவைகளில் ஏதேனும் பகுதி (இது நடைமுறை ஆண்டின் உதவு தொகைகளைக் குறிக்கும்) உறுப்பினரின் வரவிற்கு நிதியினால் பெறப்பட்ட நாளைக் கருத்திற்கொள்ளாது முழு ஆண்டிற்கும் வட்டி கொடுக்கப்பட்டது. எடுத் துக்காட்டாக திசெம்பர் மாதத்தில் பெறப்பட்ட உதவுதொகைகள் இவ்வாண் டின் சனவரி மாதத்தில் பெறப்பட்ட உதவு தொகைகளைப் போல் முழு ஆண்டிற் கான வட்டியைப் பெறுகின்றது. ஆகவே வட்டியின் பயனுள்ள வீதம் ஆண்டு ஒன்றுக்கு 9.5 வீதத்திலும் பார்க்க ஓரளவு உயர்வானதாகும்.

**திணைக்களத்தின் நிருவாகம்**

(அ) மீளாய்விற்குரிய ஆண்டில் திணைக்களம் ஏற்கனவே ''பெயர் உறுப்பி னர் எண்கள் ஆகியன அச்சிடப்பட்ட "சி'' படிவங்களை தீவின் எல்லா மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தியுள்ளது. இத்திட்டம் தொழில் தருநர் படிவங்களை நிரப்பும்போது ஏற்படும் பிழைகள் தவிர்ப்புக்கள் என்பனவற்றை இல்லாமல் செய்தல் அல்லது குறைப்பதுடன் தனியார் உறுப்பினர்களுக்கான உதவு தொகைகளை மாற்றல் செய்வதில் ஏற்படும் தாமதத்தை முற்றாக இல்லாமல் செய்கின்றது.

(ஆ) மீளாய்விற்குரிய ஆண்டில் தொழில் அமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஊழியர் சேமநிதியின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கணக் குப் புத்தகம் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்புத்தகம் தொழில் தருநரால் நிதியத்திற்குச் செலுத்தப்பட்ட உதவுதொகைகள் ஒவ்வொரு ஆண்டு முடிவில் அதன் மீதான வட்டி ஆகிய தரவுகளைக் கொண்டிருக்கும்.

தற்போது கிடைக்கப்பெற்ற தரவுகளின்படி நிதியத் தொழிற்பாடுகளின் ஒப் பீட்டு அறிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.10

**ஊழியர் சேமநிதியப் புள்ளி விபரங்கள் 1981-1982**

| | 1981 | 1982 |
|---|---|---|
| 1. பெறப்பட்ட உதவு தொகைகள் (ரூபாய்களில்) ... | 895,677,610† | 1,079.584,814† |
| 2. முதலீடுகள் (ரூபாய்களில்) ... | 1,123,971,335‡ | 1,477,718,111‡ |
| 3. முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் (ரூபாய்களில்) | 486,182,828 | 658,488,488 |
| 4. மீளளிப்புக் கொடுப்பனவுகள் (ரூபாய்களில்) ... | 300,358,747 | 372,643,569 |
| 5. மீளளிப்புக்களின் எண்ணிக்கை ... | 61,969 | 69,934 |
| 6. வட்டிவீதம் (%) | 9.5 | —* |
| 7. உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி (ரூபாய்களில்) ... | 531,672,296 | 684,034,468 |

† தொங்கற் கணக்கில் வரவு வைக்கப்பட்ட உதவு தொகைகள் நீங்கலாக

‡ அரச பிணைகளில் மீள்முதலீடு செய்யப்பட்ட முதிர்ச்சித் தொகைகளையும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட பணத்தையும் உள்ளடக்கும்

* தீர்மானிக்கப்பட வேண்டி இருக்கிறது.

## ஆளணி

ஆளுநர் முனைவர் டபிள்யூ. இராசபுத்ரம் 1982ம் ஆண்டுக் காலத்தில் பின்வரும் மாநாடுகளிலும், கூட்டங்களிலும், ஆய்வரங்குகளிலும் கலந்துகொண்டார்.

அ. பாங்கொக்கில் (பெப்புருவரி 3-7) நடைபெற்ற தென்கிழக்கு ஆசிய மத்திய வங்கி ஆளுநர்களின் (தெகிஆமவ) 17 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம். நியூடெல்கியில் (பெப்புருவரி 11-14) நடைபெற்ற ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் ஆளுநர்கள் சபையின் 10 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம்.

ஆ. கெல்சிங்கியில் (மே 6-22) நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியம், பன்னாட்டு நாணய நிதிய அபிவிருத்திக் குழு/உலக வங்கி ஆகியவற்றுக்கான இடைக்காலக் குழு 24 இன் தொகுதி ஆகியவற்றுக்கான கூட்டங்கள்.

இ. இலண்டனில் பொதுநலவமைப்பு நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்களின் ஆண்டுப் பொதுக் கூட்டம். பேசிலில் பன்னாட்டுத் தீர்ப்பனவுகளுக்கான வங்கியின் கூட்டம் (யூன் 5-14)

ஈ. ரொறன்ரோவில் பன்னாட்டு நாணய நிதியத்தினதும், உலக வங்கியினதும் ஆளுநர்கள் சபைகளின் ஆண்டுப் பொதுக் கூட்டங்கள் (ஓகத்து 27 - செத்தெம்பர் 15)

உ. சிங்கப்பூரில் நடைபெற்ற (நவெம்பர் 22-27) தென்கிழக்காசியா, நியூசிலாந்து, அவுத்திரேலியா ஆகிய நாடுகளின் ஆளுநர் சபையின் பதினன்காவது மாநாடு.

ஆளுநர் வெளிநாட்டிலிருந்த காலப்பகுதிகளில் மூத்த துணை ஆளுநர் முனைவர் எச். என். எஸ். கருணுதிலக வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகவும், நாணயச் சபையின் தலைவராகவும் செயற்பட்டார்.

நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் வெளிநாட்டிலிருந்த காலப் பகுதிகளில் திறைசேரியின் துணைச் செயலாளரான திரு. சி. பி. சண்முகம் மாற்று அலுவலர்சார் உறுப்பினராகச் செயற்பட்டார்.

ஆளுநரும், முனைவர் எச். என். எஸ். கருணுதிலகவும் 1982 யூன் 14 இலிருந்து 1982 யூன் 18 வரையும் வெளிநாட்டிலிருந்தவேளையில் துணைஆளுநர் திரு. டி. எல். கன்னங்கர. மூத்த துணை ஆளுநராகப் பதவியிலமர்த்தப்பட்டு, வங்கியின் முதன்மை நிறைவேற்று அலுவலராகச் செயற்பட்டார்.

**நியமனங்கள்**

சொலமன் தீவுகளின் நாணய மேலாண்மைச் சபையில் கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு விடுவிக்கப்பட்ட திரு. வி. எஸ். சுப்பிரமணியம், 1982 ஏப்பிரல் 16 இல் மத்திய வங்கியில் மீண்டும் கடமையேற்றார். 1982 ஏப்பிரல் 21இலிருந்து இவர் நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். நாணயச்சபையின் செயலாளராயும் 1982 நவெம்பர் 2 இலிருந்து இவர் நியமிக்கப்பட்டார்.

முதன்மைக் கணக்காளர் திரு. எச். பிரேமரத்ன 1982 நவெம்பர் 4 இலிருந்து நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

வரையறுக்கப்பட்ட தோட்ட உற்பத்திகளுக்கு விடுவிக்கப்பட்ட திரு. ஆர். எம். தென்னக்கோன் 1982 சனவரி 6 இலிருந்து வங்கிப் பணிக்கு மீண்டதுடன் மதியுரையாளராக நியமிக்கபபட்டார்.

செலாவணிக் கட்டுப்பாட்டாளர் திரு. ஏ. ரி. டபிள்யூ. ஜெகோரட்னம் தனது கடமைகளுடன் 1982 நவெம்பர் 4 இலிருந்து, வங்கித் தொழில் திணைக்களத்தில் முதன்மைக் கணக்காளராக நியமிக்கப்பட்டார்.

நிதி திட்டமிடல் அமைச்சுக்கு விடுவிக்கப்பட்ட முனைவர் எல். ஈ. என். பர்ணுந்து 1982 சனவரி 1 இல் வங்கிப் பணிக்கு மீண்டதுடன் புள்ளி விபரவியல் திணைக்களத்தில் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் மேலதிகக் கண்காணிப்பாளராக 1982 மார்சு 16 இலிருந்து திரு. சி. செல்வசிரஞ்சீவி நியமிக்கப்பட்டார்.

திரு. டி. ஏ. பி. வீரவர்தன 1982 மார்சு 16 இலிருந்து பதில் மேலதிக செலாவணிக் கட்டுப்பாட்டாளராக நியமிக்கப்பட்டார்.

**ஓய்வு பெற்றோர்**

துணை ஆளுநர் திரு. கே. கனகசபாபதி 1982 மாச்சு 7 இலிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

**விடுவிப்பில் உள்ள அலுவலர்கள் (1982 திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளவாறு)**

பின்வரும் வங்கி அலுவலர்கள் இலங்கையின் அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், பன்னாட்டு நாணய நிதியம் ஆகியவற்றில் கடமையாற்றுவதற்காக விடுவிக்கப்பட்டார்கள்:

திரு. வி. கே. விக்கிரமசிங்க இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கிக்கு, அதன் பொது முகாமையாளராகக் கடமையாற்றுவதற்கு,

நிறைவேற்றுப்பணிப்பாளர் திரு. ஏ. எஸ். ஜயவர்த்தன வங்காளதேசம், பூட்டான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளராக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு,

நிறைவேற்றுப்பணிப்பாளர் முனைவர் கே. எஸ். ஈ. ஜயதிலக, ஓமான் மத்திய வங்கியில் மதியுரையாளராக கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு,

முனைவர் எஸ். ரி. ஜி. பர்னாந்து மக்கள் வங்கியின் தலைவராகக் கடமையாற்றுவதற்காக நிதித்திட்டமிடல் அமைச்சுக்கு,

திரு. யூ. ஏ. த. சில்வா கம்பியா மத்திய வங்கியில் கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு

திரு. எஸ். இராசலிங்கம் திறைசேரியில் பொருளாதார அலுவலர்கள் பணிப்பாளராகக் கடமையாற்றுவதற்கு நிதி திட்டமிடல் அமைச்சுக்கு,

திரு. என். ஏ. தர்மபந்து சொலமன் தீவுகளின் நாணய மேலாண்மைச்சபையில் கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு,

திரு. ஈ. பாலசிங்கம் சியரலியோன் வங்கியில் கடமையாற்றுவதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திற்கு,

திரு. எம். யூ.ஏ. தென்னக்கோன் மதிப்பீட்டு தாக்கம் ஆய்வுகளின் மதியுரையாளராக பணிபுரிவதற்கு இலங்கை மகாவலி மேலாண்மைச்சபைக்கு,

முனைவர் ஜி. டபிள்யூ. பி. விக்கிரமசிங்க இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராயும், முகாமைப் பணிப்பாளராயும் கடமையாற்றுவதற்கு வர்த்தகக் கப்பற்றொழில் அமைச்சுக்கு,

திரு. ஏ. ஏ. டி. ஜஸ்ரின் - கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளராகப் பணிபுரிவதற்கு, கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சுக்கு,

முனைவர் ஏ. சி. ரந்தெனி, திருவாளர்கள் எம். பி. திசநாயக்கா, ஜி. ஏ. வி. பொன்சேகா, முனைவர் ஐ. குமாரசாமி ஆகியோர் நிதி திட்டமிடல் அமைச்சுக்கு,

திரு. சி. ஈ. ஜயசூரியா இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு,

திருவாளர்கள் டி. ஜே. எம். மீகொடவும், ஏ. ஏ. ஆர். திசநாயக்காவும் இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கிக்கு

விடுவிக்கப்பட்டார்கள்.